விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka


# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு

Valampurii

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 ஐப்பசி 26 வெள்ளிக்கிழமை (12.11.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 328



வெள்ளத்துள் மூழ்கியுள்ள தலை நகரம்...

## கொழும்பில் பெரு வெள்ளம்
## 46ஆயிரம் குடும்பங்கள் பாதிப்பு

(கொழும்பு)

கொழும்பில் தொடர்ந்து பெய்துவரும் கடும் மழையினால் கொழும்பு நகரின் பெரும்பகுதி நீரில் மூழ்கியுள்ளது. இதனால் அங்கு இயல்புநிலை பாதிக்கப்பட்டுள்ளது. கொழும்பில் நேற்று முன்தினம் இரவு முதல் தொடர்ந்து பெய்துவரும் மழையினால் தலைநகரில் பெரும் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகின்றது.

அதனால் அங்கு மின்சாரம், போக்குவரத்து போன்ற சேவைகள் பாதிப்படைந்துள்ளன. பல பகுதிகளில் பாடசாலைகளும் மூடப்பட்டுள்ளன. 46 ஆயிரத்திற்கு மேற்பட்ட குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன. பல வீதிகள் நீரில் மூழ்கியுள்ளன.

மாளிகாவத்தை, தெமட்டகொட, கிராண்ஸ்பாஸ், கொட்டகேனா, விஜயராமா, துன்முல்ல சந்தி, கொட்டிகாவத்த, இராஜகிரியா, தொட்டலங்கா ஆகிய பகுதிகள் கடுமையாக பாதிப்படைந்துள்ளதாக அவை மேலும் தெரிவித்துள்ளன. (16ஆம் பக்கம் பார்க்க)

## நல்லூர் கந்தனின் தீர்த்தத்தில் நீராடிய மாணவன் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தன் ஆலயத் தீர்த்தக் கேணியில் நீராடிய மாணவன் ஒருவர் நேற்று பரிதாபகரமாக உயிரிழந்தார்.

நேற்றுமாலை இடம் பெற்ற இத் துயர சம்பவத்தில் கந்தர் மடம் பழம் வீதியை சேர்ந்தவரும் கந்தர்மடம் சைவப் பிரகாச வித்தியாலய மாணவனுமாகிய தர்மகுலசிங்கம் கனிஷ்டன் வயது 14 என்பவரே உயிரிழந்தவராவார்.

நேற்று மாலை ஆலய வெளி வீதியில் சூரன் போர் நடந்து கொண்டிருந்த வேளை இத் துயரச்சம்பவம் இடம் பெற்றது.

தீர்த்தக் கேணியில் குளித்துக் கொண்டிருந்த பிரஸ்தாப மாணவன் திடீரெனக் காணாமல்போக அவரைத் (16ஆம் பக்கம் பார்க்க)

## யாழில் இடம்பெற்ற கைதுகளுக்கும் இராணுவத்துக்கும் தொடர்பு உண்டு

### அடையாளம் காட்டவும் தயார் என சாட்சியமளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற கைது சம்பவங்களுக்கும் காணாமல் போன சம்பவங்களுக்கும் இராணுவத்தினருக்கும் முழுத் தொடர்பு இருப்பதாக சாட்சியமளிக்கப்பட்டுள்ளது. நேற்று அரியாலை சரஸ்வதி கலாசார மண்டபத்தில் இடம் பெற்ற ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட விசாரணைக்குழு முன் சாட்சியமளித்த பெருமளவானோர் தெரிவித்தனர். சம்பவத்துடன் தொடர்புடைய இராணுவத்தினரைக் கண்டால் அவர்களை அடையாளம் காட்ட தாங்கள் தயாராக இருப்பதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (16ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தின் அறிவிப்பை ஏற்றே எனது கணவர் சரணடைந்தார்!

### யோகியின் மனைவி சாட்சியம்



(யாழ்ப்பாணம்)

இராணுவத்திடம் சரணடையும் விடுதலைப் புலிகளுக்கு பொது மன்னிப்பு வழக்கப்படும் என்ற அறிவித்தலைஏற்றே எனது கணவர்சரணடைந்தார்.

ஆனால் இன்று ஒன்றரை வருடங்கள் கடந்துள்ள போதிலும் அவர் தொடர்பான எந்த வொரு தகவலும் எனக்குக் கிடைக்கவில்லை என விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் யோகியின் மனைவி ஜெயவதி தெரிவித்தார்.

நேற்று அரியாலை சரஸ்வதி சன சமூக நிலைய கலாசார மண்ட பத்தில் நடைபெற்ற ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட நல்லிணக் ஆணைக் குழு முன் சாட்சியமளிக்கும் போது அவர் இதனைக் கூறினார்.

அவர் தனது சாட்சியத்தில் தெரிவித்ததாவது, வன்னியில் இடம்பெற்ற இறுதி (16ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாகரனின் மரணத்தை அறிந்தபோது என்னால் சாப்பிடவே முடியவில்லை

### கிழக்கு மாகாண முதலமைச்சர் பிள்ளையான் கழிவிரக்கம்



(திருகோணமலை)

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவர் வே.பிரபாகரன் இறந்துவிட்டார் என்ற செய்தியை அறிந்த பொழுது என்னால் அன்றைய தினம் காலை உணவை சாப்பிட முடியவில்லை என்று கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) தெரிவித்தார்.

திருகோணமலை இராமகிருஷ்ண சங்க சிறி கோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவும், உள்ளக் கமலம் மலர் வெளியீடும் நேற்று இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய போதே பிள்ளையான் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

வே.பிரபாகரன் இன்று உயிருடன் இருந்திருப்பார் என்றால் நான் இச்சபை (16ஆம் பக்கம் பார்க்க)

## அளவெட்டியில் சூடு இளைஞன் படுகாயம்

(அளவெட்டி)


அளவெட்டி அழகொல்லை பிள்ளையார் ஆலயத்தில் நேற்று மாலை 5.30 மணியளவில் இனந்தெரியாத ஆயுததாரிகள் மேற்கொண்ட துப்பாக்கி பிரயோகத்தில்.

இளைஞர் ஒருவர் படுகாய மடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவத்தில் அளவெட்டி வடக்கைச் சேர்ந்த கிருஸ்ணமூர்த்தி, சஞ் சீவ் (வயது 24) என்பவரே காயமடைந்த வராவார்.

ஆலயத்தில் தவில் வாசித்துவிட்டு வெளியே வந்த வேளையில் இவர்மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறித்த நபரை அழைத்த ஆயு தாரி அவரின் துப்பாக்கியை நெற்றிப் பகுதியில் வைத்துள்ளார்.

அப்போது விளையாட்டு என நினைத்து அவர் உடலை அசைத்துள்ளார் அதன்போது துப்பாக்கி வெடித்துள்ளது. இச்சம்பவத்தில் அவ் இளைஞன் இடுப்பிலும் கைப்பகுதியிலும் சூட்டுக்கு இலக்கானார்.

படுகாயமடைந்த அவர் நேற்றிரவு யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார். தனிப்பட்ட காரணங்களுக்காகவே இவர்மீது துப்பாக்கிபிரயோகம் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச-5,7)



நல்லூர்க் கந்தன் ஆலயத்தில் நேற்று இடம் பெற்ற சூரன்போர் நிகழ்வுகளைப் படங்களில் காணலாம்

(படங்கள் - எஸ்.கரன்)

## பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடனேயே தொண்டு நிறுவனத்தில் பணியாற்ற முடியும்

## அமைச்சர் ஹெகலிய தெரிவிப்பு

பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் மட்டுமே தொண்டு நிறுவனப் பணியாளர்கள் இலங்கையில் கடமையாற்ற முடியும் என ஊடக அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல அறிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் இயங்கிவரும் சகல தொண்டு நிறுவனப் பணியாளர்களும் நல்ல எண்ணத்துடன் கடமையாற்றி வருகின்றனரா என்பதை உறுதி செய்வதற்காக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

பல்வேறு தொண்டு நிறுவனங்களில் கடமையாற்றும் நோக்கில் இலங்கைக்கு விஜயம் செய்யும் பணியாளர்கள் பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்துகொள்ள வேண்டும்.

கடந்த காலங்களில் சில தொண்டு நிறுவனங்கள் நாட்டின் இறைமைக்கு குந்தகம் ஏற்படும் வகையில் செயற்பட்டன.

தொண்டு நிறுவனம் என்ற போர்வையில் சில நிறுவனங்கள் நாட்டின் நன்மதிப்புக்கு களங்கம் ஏற்படும் வகையில் செயற்படுகின்றன.

இறையாண்மையுடைய நாடு என்ற வகையில் நாட்டில் இயங்கி வரும் தொண்டு நிறுவனங்கள் குறித்து அறிந்து கொள்வதற்கான சகல உரிமையும் அரசாங்கத்திற்கு உண்டு.

தொண்டு நிறுவனமொன்றிற்கு அனுமதி வழங்குவது தொடர்பில் விசேட நிபந்தனைகள் பின்பற்றப் படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் 250 வெளிநாட்டுத் தன்னார்வ தொண்டு நிறுவனங்களும், ஆயிரத்திற்கும் மேற்பட்ட உள்ளூர் தன்னார்வ தொண்டு நிறுவனங்களும் இயங்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ந-5)

## கிளிநொச்சியில் கண்ணிவெடி அகற்ற 42 மி.ரூபாய் யப்பான் நிதி உதவி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கண்ணிவெடிகளை அகற்றுவதற்கு யப்பானிய அரசு 42 மில்லியன் ரூபாய்களை வழங்கியுள்ளது.

ஜி.பி.பி எனும் ஜப்பானிய அடிமட்ட மனித பதுகாப்பு உதவி திட்டத்தின் கீழ் இந்நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் சுமார் 500 மக்களுக்கு பாதுகாப்பான சூழலை ஏற்படுத்தும் வகையில் கண்ணி வெடிகளை அகற்றும் நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கு இந்நிதி உதவும் என யப்பானியத் தூதுவர் குனியோ தகாசுகி தெரிவித்துள்ளார். (ந-5)

## க.பொ.த. சாதாரணதர மாணவர்களுக்கான கருத்தரங்கு

க.பொ.த சாதாரணதர மாணவர்களுக்கான கருத்தரங்கு நாளையும் நாளைமறுதினமும் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கிற்கு விண்ணப்பித்த பாடசாலைகள் தங்கள் மாணவர்களை நாளை கணிதபாடத்திற்கும் நாளை மறுதினம் விஞ்ஞான பாடத்திற்கும் கணித/விஞ்ஞான ஆசிரியர்களுடன் அனுப்பி வைக்குமாறும் மாணவர்களுக்கான தேநீர், சிற்றுண்டி, மதிய உணவு என்பன வழங்கப்படுமெனவும் யாழ். மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரட்ணம் அறிவித்துள்ளார். (ஸ்ரீ)

## தற்காலிக இணைப்பிலுள்ள முல்லைத்தீவு ஆசிரியர்களுக்கு

யாழ்ப்பாணம்,வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி மற்றும் தீவகம் ஆகிய வலயங்களில் தற்காலிக இணைப்பில் கடமையாற்றி வரும் முல்லைத்தீவு கல்வி வலய ஆசிரியர்கள் எதிர்வரும் 15 ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்.மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் பணிமனையில் இம்மாத சம்பளப் பட்டியலில் கையொப்பம் இடலாமென முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)


வடமாகாண முகாமைத்துவ உதவியாளர் போட்டிப் பரீட்சைக்கான விஷேட வகுப்புகள்

❖ யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப் படிப்புக்கள் பிரிவு (யாழ். போதனா வைத்தியசாலை எதிரே) சனி - வியாழன் வரை 1.00 - 5.00 மணிவரை

❖ கிறிஸ்ரல் நெல்லியடி திங்கள் - வெள்ளி 3.00 - 6.00 மணிவரை

(சி-1619)


## சனி, ஞாயிறு தினங்களில் மின்தடை அமுலில் இருக்கும்

(யாழ்ப்பாணம்)

உயரழுத்த மின்மார்க்கங்களில் பராமரிப்பு வேலைகள் செய்யும் பொருட்டு 13 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப்பிரதேசம், கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர் பிரதேசம், தீவகப் பிரதேசம், அராலி, கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, ஆகிய இடங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் எனயாழ். பிரதேசமின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் 14.11.2010 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 8.00மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம் ஆகிய இடங்களிலும்மின் விநியோகம்தடைப் பட்டிருக்கும். வேலைகள் முன்னதாக முடிவுற்றால் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னதாகவும் மின்விநியோகம் வழங்கப்படலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)


# மரண அறிவித்தல்



## அப்புலிங்கம் பரிமளம்

எம்.எஸ்.வீதி கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அப்புலிங்கம் பரிமளம் (குஞ்சு) 11.11.2010 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அமரர்களான சின்னப்பு பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மகளும் முருகேசு முத்துப்பிள்ளை தம்பதியினரின் மருமகளும் அப்புலிங்கத்தின் அன்பு மனைவியும்,

விஸ்வலிங்கம், சண்முகராசா, செல்வராணி, தங்கராணி, தங்கராசாவின் அன்புச் சகோதரியும் திருநாமம், அப்புத்துரை, பூமணி ஆகியோரின் மைத்துனியும் கணேஷராசா, தவராசா, மகேந்திரராசா, குமாரராசா, கிருஷ்ணராசா, நளாயினி ஆகியோரின்பாசமிகு தாயாரும் பவானி, றேனுகா, மலர், குமுதா, ராஜி ஆகியோரின் மாமியாரும் லக்சன், தனுஷ், லது, லதி, லக்சா, இந்துஷன், சிந்துஷன், நக்சனா, தக்ஷிகன், சிந்துஷா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் 14.11.2010 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோண்டாவில் கிழக்கு கட்டைஆலடி இந்து மயானத்தில் தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

எம்.எஸ்.வீதி,
கோண்டாவில்.

(2844)

தகவல் :
குடும்பத்தினர்
0774047774



பொருளியற் கல்லூரி
யாழ்ப்பாணம்

A/L - 2012

தகவல் தொடர்பாடல் கற்கைகள் (ஊடகவியல் உட்பட)

ஆசிரியர் : K. ஆனந்தன்

ஆரம்பம் : நாளை 13.11.2010 சனி 12.00 pm

(சி-1618)



செல்லா சினிமா(நாதன்ஸ்)




காட்சி நேரம்:- 10.30,2.30,6.30,9.30



யாழ் மாவட்டத்தில் முதன் முறையாக !!!

**Advanced Diploma in Architecture CAD**

*(With 2D& 3D Modeling)*

இக் கற்கை நெறியானது பொறியியல் துறைசார்ந்த மாணவர்களுக்கும் மற்றும் கட்டட நிர்மாணத்துறை சார்ந்த வரைகலை தொழில்நுட்பவியலாளர்களுக்கும் மிகவும் பயனுள்ள கற்கை நெறி. -Online Class-

வகுப்புக்களை நீங்கள் விரும்பிய நேரங்களில் தெரிவு செய்ய முடியும்.
கொழும்பில் இருந்து வரும் விரிவுரையாளர் - காலம் 1 மாதம்

உங்கள் பதிவுகளை :- 15/11/2010 முன்னர் மேற்கொள்ளவும்

விபரங்களுக்கு :- UNI - ICT CAMPUS
No - 83, Palaly Road,
Kantharmadam, Jaffna.
T.P No : - 021 - 321 - 6433 / 0777 110862



யாழ்.நகரில் ... உத்தரவாதத்துடன்

கணனிகளை வாங்குவதற்கும் கணனி தொழில்நுட்ப சேவைகளுக்கும் நாடுங்கள்




MEITRO PC SYSTEM
175/3 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-1576)

# இன்று ஒரு தகவல்

## ஆறாவது அறிவு

வாழ்க்கையில் மிகவும் அடிபட்டு அவஸ்தைப் பட்டுக் கொண்டிருக்கும் ஒருத்தர் வந்தார்.

"என்ன விடயம்?" என்று கேட்டேன்.

"இந்த உலகத்தில் மனிதனாக பிறந்ததை விட மாடாகப் பிறந்திருக்கலாம் சேர்" என்றார்.

"திடீரென்று வந்து இப்படிச் சொன்னால் அது எப்படி சேர்?" என்றேன்.

"இப்பொழுதுதான் எனக்கு ஞானோதயம் வந்தது" என்றார்.

"அதற்கு என்ன காரணம் ?" என்றேன்.

"என் பையனுக்கு வேலை தேடுகிறேன். கிடைக்கவில்லை. பொண்ணுக்கு மாப்பிள்ளை தேடுகிறேன் கிடைக்கவில்லை. வீடு கட்ட கடன் கேட்டேன் கிடைக்கவில்லை. மாடாகப் பிறந்திருந்தால் இப்படியான கவலையெல்லாம் கிடையாதல்லவா! பேசாமல் வைக்கோலைத் தின்றுகொண்டு அசை போட்டுக்கொண்டே படுத்திருக்கலாமே" என்றார்.

அதன் பின் அவர் சொன்ன விடயத்தை நானும் அசைபோட ஆரம்பித்தேன்.

இயற்கையைப் பொறுத்த வரைக்கும் அது நாம் எல்லோரும் சந்தோஷமாக இருக்கவேண்டும் என்றுதான் ஆசைப்படுகிறது.

விலங்குகள், பறவைகள், தாவரங்கள் ஏனைய உயிரினங்கள் எல்லாம் நல்லபடியாக இருக்க வேண்டும் என்பதுதான் இயற்கையின் விருப்பம்.

இயற்கையின் அமைப்பை உண்மையாகப் புரிந்துகொண்டால் அது புரியும்.

இருந்தாலும் இந்த ஆள் சொன்னதை கேட்டதற்குப் பின்தான் ஒரு முக்கயமான விடயம் தெரிந்தது. இந்த உலகத்தில் முக்கிய மான ஆறு பிரச்சினைகள் உண்டு.

அந்த ஆறு பிரச்சினைகளும் ஆடு, மாடு, செடிகொடிகளுக்கு இல்லை.

ஆனால், மனிதன் அந்தப் பிரச்சிலனகளைச் சந்திக்க வேண்டியிருக்கிறது.

அந்த ஆறு பிரச்சினைகளும் என்னென்ன தெரியுமா?

"முதலில் ஆடு,மாடு எல்லாம் நமக்கென்று சொந்தமாக ஒரு வீடில்லையே!" என்று கவலைப்பட்டுக் கொண்டிருப்பதில்லை. ஆனால், மனிதனுக்கு 'வீடு' தேவைப்படுகின்றது.

இரண்டாவது ஆடைப் பிரச்சினை.

ஒரு கோழி இருக்கிறது. அது என்ன "நமக்கு போடுவதற்கு ஒரு சட்டையில்லையே என்றா கவலைப்பட்டுக் கொண்டிருக்கும்?

ஆனால், மனிதனுக்கு அந்தப் பிரச்சினை உண்டு.

முன்றாவது கல்விப் பிரச்சினை.

ஒரு பசுமாடு கவலையாக நின்று கொண்டிருக்கிறது.

நீங்கள் கிட்டப் போய் "ஏன் பசுமாடே கவலைப்பட்டுக்கொண்டிருக்கிறாய்?" என்று கேட்கிறீர்கள் .

"என் கன்றுக்குட்டிக்கு பள்ளிக்கூடத்தில் இடம் கிடைக்கவில்லை. டொனேஷன் கொடுப்பதற்கு கையில் பணமில்லை. சிபாரிசுக்கு யாரைப் பிடிக்கிறது என்றும் தெரியவில்லை" என்றா சொல்லிக் கொண்டிருக்கும்.

அதற்கு அந்தக் கவலையெல்லாம் கிடையாது. ஆனால் மனிதனுக்கு அந்தக் கவலையுண்டு.

நான்காவது வேலை வாய்ப்புப் பிரச்சினை.

வேலை கிடைக்கவில்லை என்று வேப்பமரம் கவலைப்படுவதில்லை. ஆனால், மனிதன் கவலைப்படுகிறான்.

ஐந்தாவது கல்யாணப் பிரச்சினை.

எருமைமாடு, பசுமாடு எல்லாம் பொண்ணுக்கு மாப்பிள்ளை தேடிக்கொண்டா அலையுது?

பத்திரிகையில் விளம்பரமா கொடுக்குது?

ஆறாவது பணம் சம்பந்தமான பிரச்சினை.

ஆடு மாடெல்லாம் பணத்தைச் சேமிக்க வேண்டுமானால் எதிலேயாவது முதலீடு செய் வேண்டுமென்று நினைப்பதில்லை.

பணத்தை எப்படிக் காப்பாற்றுவது என்ற கவலையும் அவற்றிற்கு இல்லை.

குதிரை குளம்போடு பிறக்கிறது. காடுமேடெல்லாம் கவலையில்லாமல் திரியலாம்.

ஆடு உடம்பெல்லாம் உரோமத்தோடு பிறக்கிறது. குளிரைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை. ஆனால், மனிதன் மட்டும் தான்ஒன்றுமில்லாமல் பிறக்கின்றான். ஏன் இந்தப்பாகுபாடு?

இதை ஒரு பெரியவரிடம் கேட்டேன். அவர் இதற்குப் பதில் சொன்னார். எப்படித்தெரியுமா? அவர் இதே கேள்வியை இயற்கையிடம் கேட்டாராம். அதற்கு இயற்கை சொல்லியதாம்:

"வேறு யாருக்கும் கொடுக்காத ஒரு வலுவான கருவியை மனிதனுக்குக் கொடுத்திருக்கிறேனே... அந்தக் கருவியை உபயோகப்படுத்தி அந்த ஆறு பிரச்சினையை மட்டுமல்ல ஆறு கோடிப்பிரச்சினைகள் இருந்தாலும் அதைச் சமாளிக்கலாம் . அதுதான் ஆறாவது அறிவு. அதை உபயோகப்படுத்தினால் காலுக்கு செருப்பு தயாரிக்கலாம்.

குளிருக்கு போர்வை தயாரிக்கலாம். என்ன வேண்டுமானா லும் செய்யலாம். இதுதான் இயற்கையின் பதில். அதனால் நாம் இயற்கையை சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

இயற்கையின் படைப்பையே நாம் சரியாகப் புரிந்து கொள்வதில்லையே. அதற்கு ஒரு உதாரணம் சொல்கிறேன் கேளுங்கள்.

நகரிலிருந்து ஒருத்தன் கிராமத்துக்கு வந்தான். "ஆகா! எவ்வளவு அழகான பசு! இயற்கையின் படைப்பு. அது சரி இதற்கெல்லாம் ஏன் கொம்பில்லை?" என்று கேட்டான். அதற்கு அங்கிருந்த இன்னொருத்தர் பதில் சொன்னார். "பசுமாட்டுக்கு கொம்பு இல்லாததுக்கு பல காரணம் உண்டு. கன்றுக்குட்டியாக இருந்தால் கொம்பு இருக்காது. பசு வளர்ந்து பெரிதாக வந்ததுக்கு பின் தான் கொம்பு முளைக்கும் என்பது ஒரு காரணம்.

சில சமயம் வளரும் கொம்பை எடுத்து விடுவதும் உண்டு. அதுவும் ஒரு காரணம். ஆனால்...

இதற்கு ஏன் கொம்பு இல்லையென்றால் அதற்கு காரணம், அது பசு இல்லை குதிரை என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கான கருத்தரங்கு

யாழ். பாதுகாப்புப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்கவின் பணிப்புரையின்பேரில் யாழ். குடாநாட்டில் குறைந்த வளங்களைக் கொண்ட பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவ மாணவிகளுக்கு கணிதம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கான கருத்தரங்கொன்று 51ஆவது படையணித் தலைமையகத்தின் மேற்பார்வையில் யாழ். வீரசிங்கம் மண்டபம் மற்றும் வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதனை 512 ஆவது படைப் பிரிவுமற்றும்யாழ்.மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் ஆகியோர் இணைந்து நடத்தவுள்ளனர்.

யாழ். குடாநாட்டில் கணிதம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் தேர்ச்சிபெற்ற ஆசிரியர்களால் இந்தக் கருத்தரங்கு நடத்தப்படுவதுடன் இம்முறை குறைந்த வளங்களைக் கொண்ட பாடசாலைகளில் இருந்து க.பொ.த. சா/த பரீட்சைக்குத் தோற்றும் சுமார் 2ஆயி ரம் மாணவர்களை இதில் பங்குபற்ற வைப்பதற்கு மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் வே.தி. செல்வரெட்ணம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

இந்தக் கருத்தரங்கின் ஆரம்ப வைபவம் நாளை சனிக்கிழமை காலை 8 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள் ளது. இதில் கலந்துகொள்ளும் அனைத்து மாணவ மாணவியரும் அன்றையதினம் யாழ். வீரசிங்கம் மண்டபத்திற்கு வருகை தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

அத்துடன் நாளை சனிக்கிழமை கணிதம், நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை விஞ்ஞான பாட கருத்தரங்கு நடத்தப்படவுள்ளதுடன் தேவையான அனைத்து மாதிரிகளும் இலவசமாக வழங்கப்படவுள்ளது. (ஸ்ரீ-2)

# அதிபர்களுக்கான கூட்டம்

தென்மராட்சி வலயப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு வலயக் கல்வி அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு தென்மராட்சிவலயப் பாடசாலை அதிபர்களை தவறாது சமுகம் தரும் படி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-29)

# செயலமர்வு

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலயப் பாடசாலைகளில் தரம் 6 இற்கு தமிழ்ப் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான தரவட்ட செயலமர்வு இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 1 மணி தொடக்கம் 4 மணி வரை வல்யக் கல்வி அலுவலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இச் செயலமர்வில் மேற்படி ஆசிரியர்களை தவறாது சமுகமளிக்குமாறு தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார்.

(ஸ்ரீ-29)

# இராசி பலன்

*12.11.2010*
*(ஐப்பசி 26, வெள்ளிக்கிழமை)*
*சஷ்டி முற்பகல் 9.56 மணிவரை*
*உத்தராடம் பிற்பகல் 2.56 மணிவரை*
*இராகுகாலம் 10.36-12.06 மணிவரை*
*சுபநேரம் 6.06-7.36 மணிவரை*
*நான்காம் ஐப்பசி வெள்ளி.*

**மேடம்** புதிய முயற்சிகளில் வெற்றி பெறும் நாள், பெரிய மனிதர்களின் உதவி கிடைக்கலாம், வருங்கால நலன்கருதி சேமிக்க முற்படுவீர்கள், ஆலய வழிபாட்டால் ஆனந்தம் காண்பீர்கள்.

**இடபம்** வம்பு, வழக்குகள் தீர்ந்து வளம் காணும் நாள், அரை குறையாக நின்ற பணிகளை மீண்டும் தொடர்வீர்கள், குடும்பத்தில் நிலவி வந்த மனஸ்தாபம் சுமுகமாக முடியும், பிரயாண பலன் உண்டு.

**மிதுனம்** கவலைகள் தீர கந்தனை வழிபட வேண்டிய நாள், உறவினர் விவகாரங்களில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது, சேமிப்பு செலவளியாது இருக்க விழிப்புணர்ச்சி தேவை.

**கடகம்** நட்பால் நல்ல காரியமொன்று நடைபெறும் நாள், உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள், தெய்வ தரிசனத்தால் மகிழ்ச்சி காண்பீர்கள், செல்வாக்கான நாள்.

**சிங்கம்** தைரியத்தோடும், தன்னம்பிக்கையோடும் பணிபுரியும் நாள், தேக நலனில் தெரிவு பிறக்கும், எடுத்த காரியங்கள் எளிதில் நிறைவேறலாம், தொழில் போட்டிகள் மாறும்.

**கன்னி** இன்பங்கள் இல்லம் தேடி வரலாம், தடைப்பட்ட காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், உயரதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள், பிள்ளைகள் வழியில் நன்மையுண்டு.

**துலாம்** சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், வாகன சுகமுண்டு, தாய்வழி உறவினர்கள் மூலம் நன்மையுண்டு, தொழில் முன்னேற்றம் ஏற்படும்.

**விருச்சிகம்** வருமானம் அதிகரிக்கும், வழிபாடுகளில் நம்பிக்கை வைப்பீர்கள், தொலைபேசி வழியில் கனிந்த தகவல்கள் வந்து சேரலாம், இளைய சகோதரர் மூலம் நன்மையுண்டு.

**தனுசு** எதிர்பாராத தனலாபம் இல்லம் தேடி வரலாம், செய்தொழில் மேன்மையும், உயர்வும் கிட்டும், குடும்பத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான அறிகுறி தோன்றும்.

**மகரம்** தொட்ட காரியம் வெற்றி பெற அம்பிகையை வழிபட வேண்டிய நாள், தேக நலனில் கூடிய அக்கறை காட்டுவீர்கள், கற்பனை மிகுதியால் திகழ்வீர்கள்.

**கும்பம்** மாற்றங்களால் ஏற்றம் பெறும் நாள், உறவினர்களின் வருகையில் திடீர் செலவுகள் ஏற்படலாம், போக்குவரத்தால் அலைச்சல் அதிகரிக்கும்.

**மீனம்** வருமானம் இருமடங்காகும் நாள், ஆதரவுக்கரம் நீட்டுவோரின் எண்ணக்கை அதிகரிக்கும், பயணங்கள் செல்ல போட்ட திட்டங்கள் வெற்றி பெறலாம்.

வளவன்

# யாழ்ப்பாணப் புவியியலாளர் சங்கம் அங்குரார்ப்பணம் செய்யப்படவுள்ளது

(யாழ்ப்பாணம்)


யாழ்.பல்கலைக்கழகத்தின் புவியியற்றுறையில் கல்வி கற்று வெளியேறிய புவியியல் பட்டதாரிகளை ஒருங்கிணைக்கும் பொருட்டு யாழ்ப்பாணப் புவியியலாளர் சங்கம் ஒன்றை ஆரம்பிக்க யாழ்.பல்கலைக்கழக புவியியற்றுறையினர் தீர்மானித்துள்ளனர்.

இச்சங்கம் ஆரம்பிப்பதற்கான தொடக்க நடவடிக்கையாக யாழ்.பல்கலைப் புவியியற்றுறையில் கல்வி கற்று வெளியேறியவர்களின் விபரங்கள் சேகரிக்கப் படவுள்ளது.

எனவே, யாழ்.பல்கலைக்கழகத்தில் கல்விகற்ற புவியியல் (பொதுக்கலைமாணி, சிறப்புக் கலைமாணி) பட்ட தாரிகள் தங்களது முழுப்பெயர், வதிவிட முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் முகவரி, பட்டம் பெற்ற ஆண்டு, தற்போதைய தொழில் மற்றும் தொழில் செய்யுமிடம் ஆகிய விபரங்களை தலைவர், புவியியற்றுறை, யாழ்.பல்கலைக் கழகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அல்லது நா.பிரதீபராஜா புவியியற்றுறை, யாழ்.பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அல்லது npiratheeparajah @gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு யாழ்.பல்கலைக்கழக புவியியற்றுறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.ரி.பி.இராஜேஸ்வரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 70 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 50 | 80 | 60 |
| தக்காளி | 120 | 120 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 90 |
| கோவா | 60 | 70 | 70 |
| கரட் | 50 | 80 | 70 |
| பூசணி | 50 | 40 | 40 |
| புடோல் | 60 | 60 | 50 |
| வாழைக்காய் | 40 | 50 | 40 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 100 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 90 |
| பாகற்காய் | 250 | 200 | 120 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 50 |
| கருணைக் கிழங்கு | 45 | 60 | 50 |
| பயற்றங்காய் | 220 | 200 | 150 |
| லீக்ஸ் | 120 | 60 | 110 |
| பீற்றூட் | 60 | 60 | 120 |
| கறிமிளகாய் | 100 | 120 | 130 |
| முருங்கைக்காய் | 200 | -- | 140 |
| போஞ்சி | 160 | 140 | 130 |
| கத்தரிதம்புள்ள | 40 | 70 | 60 |
| கீரை - 1 பிடி | 30 | 40 | 30 |
| தேசிக்காய் | 80 | 120 | 90 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 40 | 45 |



யா/உயரப்புலம் மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையில் மாணவர்களுக்கான பாதணிகள் வழங்கும் வைபவம் நேற்று ஆளுநர் பணிமனையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் ஆகியோர் மாணவர்களுக்கு பாதணிகளை வழங்குவதையும், மாணவர்களுடன் அதிபர் எஸ்.புஸ்பரத்தினம் மற்றும் விருந்தினர்கள் நிற்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

## சகலகலாவல்லி மாலைப் போட்டியில் வெற்றியீட்டியோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

வலி. கிழக்கு சைவசமய அருள் நெறி மன்றத்தால் நடாத்தப்பட்ட சகலகலாவல்லி மாலை மனனப் போட்டியில் வெற்றியீட்டியோர் விபரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்றோர் வருமாறு;

**கீழ்ப்பிரிவு**

ஜெ.ரித்திகா (யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்), த.தக்ஷாயினி (யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்)

***மூன்றாமிடம் இருவர்***

ம.கலைநிலா (யா/நீர்வேலி றோ.க.த. கலவன் பாடசாலை), ப.சிந்துஜா (யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்)

**மேற்பிரிவு**

கா.மதுரா (யா/நீர்வேலி றோமன் க.த.க. பாடசாலை), ஜெ.தரணீதரன் (யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்), பா.பிரார்த்தனா (யா/புத்தூர் ஆரம்பப் பாடசாலை). (ஸ்ரீ)

## மாற்றுத் திறனாளர்களுக்கான முழுநாள் பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

இதம் உளவள நிறுவனத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் 16 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட மாற்றுத் திறனாளர்களுக்கான முழுநாள் பயிற்சிப் பட்டறை பருத்தித்துறை சிவன் கோயில் பர்வதவர்த்தினி கலாமண்டபத்தில் நடைபெறவுள்ளது.


இதம் உளவள நிறுவனமானது மாற்றுத் திறனாளர்களுக்கான உளவளத்துணை , சுயதொழில் விருத்தி உதவி செய்வதுடன் மற்றும் மருத்துவச் சிகிச்சை, செயற்கை அவயவங்கள் பொருத்துதல், நடமாடுவதற்கான உபகரண உதவி போன்றவற்றை ஏனைய நிபுணத்துவம் வாய்ந்த நிறுவனங்களுடனும் பிரதேச செயலக சமூக சேவை பிரிவுடனும் வலைப்பின்னலை ஏற்படுத்தி அவர்களது தேவைகளினை நிறைவேற்றி வருகின்றது.

அத்துடன் இப் பயிற்சிப் பட்டறையில் பருத்தித்துறை பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர், வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் உத்தியோகத்தர்கள், ஜெய்ப்பூர் நிறுவன நிகழ்ச்சித்திட்ட அலுவலர் குழாம், ஐ.சி.ஆர்.சி. பிரதிநிதி ஆகியோர் கலந்துகொண்டு தமது நிறுவனச் செயற்பாடுகள் தொடர்பாகவும் தமது நிறுவனத்தினூடாக இவர்களுக்கு எவ்வாறு உதவலாம் என்பது தொடர்பாகவும் ஆராயவுள்ளனர்.


மேலும் மாற்றுத் திறனாளர்களது தேவைகள் அவர்களது மருத்துவ சிகிச்சை மற்றும் உளவிருத்தி தொடர்பாகவும் சமூக சேவை திணைக்களத்தின் செயற்பாடுகள் பற்றியதாகவும் இந்நிகழ்வில் கலந்துரையாடப்பட உள்ளதாக பருத்தித்துறை பிரிவு உளவளத் துணையாளர் திருமதி ரவிக்குமார் புஸ்பலதா தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)




## கொக்குவில் இந்து மாணவர்கள் விஞ்ஞான துறையில் தேசிய மட்டத்தில் சாதனை



க. ஹரிச்சந்திரா



எஸ்.சக்தி தாஸ்



பி.ஜெனகன்

இலங்கைப் பொறியியலாளர்கள் நிறுவனம் (IESL) அகில இலங்கை ரீதியில் நடாத்திய ' இளம் கண்டுபிடிப்பாளர்கள் - 2010"என்ற போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி க.பொ.த.உயர்தர விஞ்ஞானப் பிரிவு மாணவர்கள்,வெவ்வேறு துறைகளில் விருதுகளைப் பெற்றுள்ளனர்.

அவ் வகையில் செல்வன் காலிங்கராசா ஹரிச்சந்திரா என்ற மாணவன் சுற்றாடல் துறையில் ''இயற்கையுடன் இணைந்த விஞ்ஞான இல்லம்'' எனும் கருப் பொருளிலான மாதிரி வீடுவடிவமைப்பிற்காக தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தைப்பெற்று வெள்ளிப் பதக்கத்தையும் அதி சிறப்புச் சான்றிதழையும் பெற்றுக்கொண்டார்.

செல்வன் ஸ்ரீதரபவான் சக்திதாஸ் பொறியியல் துறையில் செலவை சிக்கனப்படுத்தி நேரத்தை மீதப்படுத்தி மீனைக் கருவாடாக மாற்றும் இயந்திரத்தை வடிவமைத்து தேசிய மட்டத்தில் அதிசிறப்பு சான்றிதழைப் பெற்றுக்கொண்டார்.

அத்துடன் செல்வன் பகீரதன் ஜெனகன் விண்வெளித்துறையில் ரொக்கற்றை விட வேகமாக செல்லக்கூடிய விண்வெளிக் கப்பல் மாதிரி ஒன்றை வடிவமைத்ததற்காக பாராட்டைப் பெற்றுக்கொண்டார். (ஸ்ரீ-2)

## மூன்று தசாப்தங்களுக்கு மேலாக திருத்தப்படாதுள்ள வீதி

### மக்கள் பெரும் அசௌகரியம்

(கரவெட்டி)

அல்வாய் கிழக்கு ஆலடி வைரவர், பத்தானை வீதி மூன்று தசாப்தத்திற்கு மேல் குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது. இவ் வீதியால் தினமும் பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள், விவசாயிகள் எனப் பெருமளவானோர் பயணம் செய்கின்றனர்.

மேற்குறித்த தசாப்தங்களுக்கு முன் இவ் வீதி தார் போடப்பட்டிருந்ததாகவும் ஆனால் இதுவரை எதுவிதமான வீதித் திருத்த வேலைகளும் மேற்கொள்ளப்படவில்லை என்று அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கரவெட்டிப் பிரதேச செயலகம் மற்றும் பிரதேச சபைக்கு உட்பட்ட இவ் வீதியானது பருவ மழையினால் மழைநீர் தேங்கி முற்றாக பயணம் செய்ய முடியாத நிலையில் உள்ளது.

இதற்கான மாற்று வீதியாக ஓடை வைரவர் வீதி பயன்படுத்தப்பட்டு வருவதுடன் இம் மாற்று வீதியால்'பயணம் மேற்கொள்ள பல மைல்தூரம் செல்ல வேண்டிய நிலையும் உள்ளது. இக்கிராம மக்களுக்கு இவ் வீதிப் பிரச்சினை பெரும் சிரமத்தையும் கஷ்டத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

எனவே உரிய தரப்பினர் துரிதமாக நடவடிக்கை மேற்கொண்டு வீதியை புனரமைத்துத் தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஸ்ரீ-24)

## இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்ட கிராமங்களில் வீதிகள் புனரமைப்பு

(பருத்தித்துறை)

யாழ்.மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்து விடுவிக்கப்பட்ட கிராமங்களிலுள்ள சில வீதிகள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

இராணுவத்தினரின் அனுமதியுடன் வளலாய், மருதங்கேணிப் பகுதிகளில் உள்ள வீதிகளே இவ்வாறு புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

மேற்குறித்த பகுதிகளில் மக்கள் மீளக் குடியேறியதையடுத்து அவர்களுக்கான போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தும் வகையில் இந் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

வளலாய் பகுதியில் ஒரு கோடி ரூபா செலவில் வீதி புனரமைப்பும் 50 இலட்சம் ரூபா செலவில் பொதுச் சந்தையும் மற்றும் மருதங்கேணிப் பகுதியில் 4கோடி ரூபா செலவில் சில வீதிகளும் புனரமைக்கப்படவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகள் துரிதமடைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-10)

## மணியந்தோட்ட மக்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுக்கும் சோஆ நிறுவனம்

(கொழும்புத்துறை)

மணியந்தோட்டத்தில் சோஆ அகதிகளுக்கான மனிதாபிமான நிறுவனம் 46 வீடுகளை அமைத்துக் கொடுக்கும் பணிகளில் தற்போது ஈடுபட்டுள்ளது.

தொடர்ந்து மேற்படி வீடுகளுக்கு மலசலகூடம் அமைக்கும் பணிகள் நடைபெற உள்ளது.

அண்மையில் 26 வீடுகள் மணியந்தோட்ட மக்களிடம் முதற்கட்டமாக கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இரண்டாம் கட்டமாக 46 வீடுகள் அமைக்கும் பணி பூர்த்தியானதும் 3 ஆம் கட்டமாக வீடுகள் அமைத்துக் கொடுக்கும் பணிகள் நடைபெறுவதற்கான பதிவுகள் தற்போது. சோஆ நிறுவனத்தால் இடம் பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-51)

# அரசுக்கு எதிரானவர்களை அடக்குவதற்கு புலனாய்வுப் பிரிவினரைப் பயன்படுத்தக் கூடாது

## நல்லிணக்க ஆணைக்குழுவில் ரி.எம்.ஆரியரட்ன தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்திற்கு எதிராக செயற்படுவோரை அடக்குவதற்காக குற்றத்தடுப்பு பிரிவு மற்றும் புலனாய்வுப் பிரிவினை பயன்படுத்தக் கூடாது என சர்வோதய இயக்கத்தின் ஸ்தாபகரும் தலைவருமான ரீ.எம்.ஆரியரட்ன தெரிவித்துள்ளார்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவிடம் சாட்சியமளித்த போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இராணுவமயமாக்கலின் மூலம் நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது எனவும் அரசாங்கத்திற்கு எதிரானவர்களை புலனாய்வுப் பிரிவினரின் ஊடாக அடக்குவது தவறானது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 1983 ஆம் ஆண்டு புலிகள் 13 இராணுவத்தினரை படுகொலை செய்தபோது அரசாங்கத்தின் நடவடிக்கைகள் தெற்கில் பதற்ற நிலைமை ஏற்பட ஏதுவாக அமைந்ததென அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதிகார பலம் கொண்ட அரசாங்கம் நிராயுத பாணிகளான மக்கள் மீது அடக்கு முறைகளை பயன்படுத்துவது பிழையானது எனவும் அரச அதிகாரம் பிழையான வகையில் பயன்படுத்தப்படுவதனால் சமூகத்தில் பல்வேறு குழப்ப நிலைமைகளை ஏற்படுத்தும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மக்களின் உணர்வுகளை சட்டமாக இயற்ற முடியாதெனவும் சிங்கள அரசியல் தலைவர்களும் படையினரும் பக்கச் சார்பற்ற கொள்கைகளை பின்பற்றியிருந்தால் இன முறுகல் கடுமையாக வெடித்திருக்காது என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இனப்பிரச்சினைக்கு அடிப்படை ரீதியாக தீர்வு காண்பதற்கு அரசியல் சாசனத்தில் திருத்தங்கள் கொண்டுவரப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார். (ஶ்ரீ-2)

## சேர்பியன் வெளிவிவகார அமைச்சர் இலங்கை விஜயம்

(கொழும்பு)

சேர்பியன் வெளிவிவகார அமைச்சர் மிர் கோஸ்டிபன் விக் இன்று வெள்ளிக்கிழமை இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இவர் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை வரை இங்கு தங்கியிருப்பார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இங்கு பல உயர் மட்ட அதிகாரிகளை சந்தித்து கலந்துரையாடவுள்ளார். (ஶ்ரீ-2)

## இலங்கை இராணுவம் முதன்முறையாக நடத்தும் கடல், வான், தரைப்போர்ப் பயிற்சி

(கொழும்பு)

இலங்கை இராணுவம் முதன் முறையாக சீல் எனப்படும் கடல், வான், தரைப்போர்ப் பயிற்சி ஒன்றை ஒன்பது நாட்கள் மன்னார் சிலாவத்துறையில் மேற்கொள்ளவுள்ளது.

கொமரன் ஸ்ரைக் என்ற பெயரில் இந்தப் போர்ப்பயிற்சி நடவடிக்கை எதிர்வரும் 21 ஆம் திகதி ஆரம்பமாகும்.

முப்படைகளையும் சேர்ந்த சுமார் இரண்டாயிரத்து 500 படையினர் இந்தப் போர்ப் பயிற்சி நடவடிக்கையில் பங்கேற்கவுள்ளதுடன் இதில் இராணுவத்தைச் சேர்ந்த ஆயிரத்து 600 கொமாண்டோக்கள் மற்றும் சிறப்புப் படைகளைச் சேர்ந்தவர்களே ஈடுபடுத்தப் படவுள்ளனர்.

முடிவெடுக்கும் ஆற்றலை விருத்தியடையச் செய்தல், கட்டளையிடுதல், செயற்றிறன் ஆகியவற்றை அதிகரிக்கும் நோக்கில் இந்தப் போர்ப்பயிற்சி நடத்தப்படவுள்ளது.

இது இராணுவத் தளபதி லெப் ஜெனரல் ஜெகத் ஜெயசூரியவினால் திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படவுள்ளதாக இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் உபய மெடவெல தெரிவித்துள்ளார். (ஶ்ரீ-2)


## அறிவித்தல்

## யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றில்

வழ/இல.07/2010 தத்துவம்

காலஞ்சென்ற குணரட்ணம் ஶ்ரீதரனின் மரணச் சொத்து சம்பந்தமான குடியியல் நடைமுறைச் சட்டக்கோவையின் பிரிவு 528இன் கீழான விண்ணப்பம்

குணரத்தினம் ஶ்ரீதரன் கைம்பெண் சிவராஜசோதி "சாயிபதி" உடுவில் கிழக்கு,சுன்னாகம்.

-மனுதார்

இத்தாற் சகலருமறிக,மேலே பெயர் குறிப்பிட்ட மனுதாரராகிய குணரட்ணம் ஶ்ரீதரன் கைம்பெண் சிவராஜசோதி இம்மன்றில் மனு, சத்தியக்கூற்று மற்றும் ஆவணங்கள் சமர்ப்பித்து காலஞ்சென்ற குணரட்ணம் ஶ்ரீதரனின் மரணச் சொத்துக்களை (வங்கியிலுள்ள பணம்) நிர்வகிப்பதற்கு தனக்கு நிர்வாகத்தத்துவப்பத்திரம் வழங்குமாறு விண்ணப்பித்துள்ளார்.

எனவே காலஞ்சென்ற குணரட்ணம் ஶ்ரீதரனின் மரணச் சொத்துக்களை நிர்வகிப்பதற்கு மனுதாரருக்கு நிர்வாகத்தத்துவப்பத்திரம் வழங்குவதற்கு ஆட்சேபனை தெரிவிக்க விரும்பும் எவரும் தமது ஆட்சேபனைகளை 2010ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 19ஆம் திகதிக்கு முன்னர் இம் மன்றில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

2010ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 27ஆம் திகதி.

வரைவு,
மனுதார் சட்டத்தரணி.

மன்றின் கட்டளைப்படி,
பதிவாளர்.

(சி/1299)



யாழ்ப்பாணத்தில்

# B.O.C. Travels

SUBSIDIARY BANK OF CEYLON



இலங்கை வங்கி மேற்தரக் கிளை.
1ம் மாடி ஆஸ்பத்திரி வீதி.
யாழ்ப்பாணம்.

இலங்கை வங்கியின் துணை நிறுவனமான BOC Travels (Pvt) Ltd யாழ்.மக்களின் நம்பிக்கையை வென்று தனது முதலாவது வருடத்தை நிறைவுசெய்து இரண்டாவது வருடத்தில் காலடி பதிக்கிறது.

SPECIAL RATES

| Countries | Rates |
|---|---|
| கொழும்பு / சென்னை / கொழும்பு | 13100/- |
| கொழும்பு / திருச்சிராப்பள்ளி / கொழும்பு | 13100/- |
| கொழும்பு / டோகா (கட்டார்) | 18500/- |
| கொழும்பு / சிங்கப்பூர் / கொழும்பு | 28500/- |
| கொழும்பு / கோலாலம்பூர் / கொழும்பு | 30750/- |
| கொழும்பு / லண்டன் | 38300/- |
| கொழும்பு / லண்டன் / கொழும்பு | 75000/- |
| கொழும்பு / பரிஸ் | 38300/- |
| கொழும்பு / பரிஸ் / கொழும்பு | 64500/- |
| கொழும்பு / பிரங்பேட் | 38300/- |
| கொழும்பு / பிரங்பேட் / கொழும்பு | 68100/- |
| கொழும்பு / பேத் | 47850/- |
| கொழும்பு / சிட்னி / கொழும்பு | 93350/- |
| கொழும்பு / ரொரன்டோ | 71700/- |
| கொழும்பு / ரொரன்டோ / கொழும்பு | 124100/- |
| கொழும்பு / மிலான் | 43181/- |
| கொழும்பு / மிலான் / கொழும்பு | 83144/- |
| கொழும்பு / றோம் | 38285/- |
| கொழும்பு / றோம் / கொழும்பு | 59790/- |

* The above air fares are subject to change without prior notice

* Conditions apply

(சி/1598)

## எமது சேவைகள்

24 மணிநேர சேவைகள் 0727849535

- இந்தியா,கனடா,லண்டன்,பிரான்ஸ், அமெரிக்கா,சுவிஸ்,கட்டார்,சவுதி போன்ற அனைத்து நாடுகளுக்குமான விமானப் பயணச்சீட்டுக்களை உடன் பெற்றுக் கொள்ளலாம்.
- இந்தியா,மலேசியா,தாய்லாந்து போன்ற நாடுகளுக்கான வீசாக்களை இங்கிருந்தவாறே விண்ணப்பிக்க முடியும். அத்துடன் ஏனைய நாடுகளுக்குமான வீசா உதவியினையும் எம்மிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
- வெளிநாட்டிலிருந்து வரும் உங்கள் உறவினர்களின் விமானச்சீட்டினை Date Change/Reconfirmation செய்து கொள்ள முடியும்.
- Renewal of Passport ,Travel Insurance, Hotel பதிவுகள் போன்றவற்றை எம்மிடம் செய்துகொள்ள முடியும்.

இரண்டாவது அகவையில் கால்பதிக்கும் எம்முடன் இணைந்த அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

உங்கள் நம்பிக்கையான பிரயாண தேவைக்கு
BOC Travels (Pvt) Ltd
இது ஓர் இலங்கை வங்கியின் துணை நிறுவனம்.

HEAD OFFICE T : +94 112688154
FORT BRANCH T : +94 112393155
RATHANAPURA BRANCH T : +94 452224813
WELLAWATTE BRANCH T : +94 114505574
KANDY BRANCH T : +94 812205131

www.boctravels.com

தொடர்புகளுக்கு :
இலங்கை வங்கி மேற்தரக் கிளை.
1ம் மாடி ஆஸ்பத்திரி வீதி,
(வேம்படிச் சந்தி அருகில்)
யாழ்ப்பாணம்.
+ 94 21 222 4575 - 76
E-mail: sureshk.boctrav@galileo.lk

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# எமது வளிமண்டலத்தில் ஓசோன்

(சென்றவாரத் தொடர்ச்சி)

புவிமேற்பரப்பில் நடைபெறும் பல்வேறுபட்ட தகன செயற்பாடுகளில் (அணு உலைகள், வாகனங்கள்) NO, $NO_2$ ஆகிய இரு வகையான நைதரசன் ஒட்சைட்டுக்கள் உருவாகின்றன. ஆனால் இவை வளிமண்டலத்தில் மிகக் குறுகிய காலமே நிலைத்திருக்கக் கூடியன. இவை உடனடியாக நைத்திரிக்கமிலமாக மாற்றப்பட்டு மழைத் துளிகளுடன் சேர்ந்து அகற்றப்பட்டு விடுகின்றன.

படை மண்டலத்திலுள்ள மிகப் பிரதானமான $NO_x$ நைத்திரஸ் ஒட்சைட்டாகும் ($N_2O$). 30km இலும் குறைந்தவிலான தூரத்தில் $N_2O$ ஆனது அருட்டப்பட்ட நிலையிலுள்ள ஒட்சிசன் அணுவுடன் இணைந்து நைத்திரிக்கொட்சைட்டை (NO) தோற்றுவிக்கின்றது.

$$N_2O + O(^1D) \rightarrow 2NO$$

$N_2O$ வாயுவானது நீரில் கரையும்தன்மை குறைந்தவையாகவும் கட்புல ஒளியை உறிஞ்சும் ஆற்றலற்றவையாகவும், ஒளிப் பகுப்படையமாட்டாதவையாகவும் இருப்பதனால், உறுதியானவையாகவும், அதிக கால நிலைத்திருத்தலுடையவையாகவும் (120 வருடங்கள்) காணப்படுகின்றன. எனவே இக் காலப்பகுதியில் இவற்றில் அதிகமானவை படை மண்டலத்தை அடைந்து அருட்டலடைந்த ஒட்சிசனுடன் தாக்கமடைந்து NO வாயுவை உருவாக்குகின்றன.

புவிமேற்பரப்பிலிருந்து 30kmக்கு மேற்பட்ட தூரத்தில் NO வாயுவானது $N_2$ வாயுவின் ஒளி இரசாயனப் பிரிகையின் மூலமும் உருவாக்கப்படுகின்றது.

$$N2 + h\gamma \rightarrow (\lambda < 126nm)\ N(4s) + N(^2D)$$

$$N(4s) + O_2 \rightarrow NO + O$$

இவ்வாறான வழிகளில் உருவாக்கப்படும் NO வாயுவானது ஒரு ஊக்கியாக தொழிற்பட்டு ஓசோனை அழிப்பதற்குக் காரணமாக அமைகின்றது.

$$NO + O_3 \rightarrow NO_2 + O_2$$

$$NO_2 + O \rightarrow NO^{\cdot} + O_2$$

$$O + O_3 \rightarrow 2O_2$$

$Cl^{\cdot}$ மற்றும் $ClO^{\cdot}$ என்பனவும் மற்றும் இவை போன்ற புரோமீனின் பெறுதிகளும் படைமண்டல ஓசோன் அழிவுக்கு மிகப் பாரிய பங்களிப்பை வழங்குகின்றன. இவை இயற்கையாகவும் மனித செயற்பாடுகளாலும் உருவாக்கப்படுகின்றன. மெதைல் குளோரைட்டானது $Cl^{\cdot}$ இன முக்கியமான இயற்கை முதலாகக் காணப்படுகின்றது. இது உயிரினவியல் தாக்கங்களின் மூலமும் எரிமலை வெடிப்புக்களின் போதும் பிரதானமாக உருவாகின்றது.

$$CH_3Cl + h\gamma \rightarrow {}^{\cdot}CH_3 + {}^{\cdot}Cl$$

### குளோரோ புளோரோ காபன்கள் (CFC)

குளோரோபுளோரோ காபனானது 1930 களில் கண்டுபிடிக்கப்பட்டது. இவை இயற்கையாகக் காணப்படுவதில்லை. CFC களின் சிறப்பியல்பு என்னவென்றால் இவை புவிமேற்பரப்பில் சாதாரண பௌதிக, இரசாயனத் தாக்கங்களில் ஈடுபடாத சடத்துவத் தன்மை வாய்ந்தவை. அத்துடன் தாழ்ந்த பாகுநிலை, தாழ்ந்த மேற்பரப்பு இழுவிசை மற்றும் தாழ்ந்த கொதிநிலையுடையவை. இவ்வியல்புகளால் இவை நச்சுத்தன்மை அற்றவையாகவும் தீப்பற்றக்கூடிய தன்மை அற்றவையாகவும் காணப்பட்டன. இவ்வாறான சிறந்த இயல்புகளை இவ் வாயுக்கள் கொண்டிருப்பதனால் ஆரம்ப காலங்களில் இவை குளிரூட்டிகளிலும் காற்றுக்கட்டுப் படுத்திகளிலும் பயன்படுத்தப்பட்டன.

CFC ஆனது கூடிய வருட நிலைத்திருத்தலுடையது. இக்காலப் பகுதியில் இவை மிதந்து படை மண்டலத்தை அடைந்துவிடுகின்றன. அங்கு இவை சக்திகூடிய புற ஊதாக் கதிர்களுடன் மோதும்போது, குளோரின் அணுக்களைத் தோற்றுவிக்கின்றன. இக் குளோரின் அணுக்கள் ஊக்கியாகத் தொழிற்பட்டுப் பல்லாயிரக்கணக்கான ஓசோன் மூலக்கூறுகள் அழிக்கப்படக் காரணமாயிருக்கின்றன.

மிகக் கூடிய தாக்கமுடைய குளோரினானது காற்றினால் கீழுள்ள வளி மண்டலத்தை அடைந்து பின்னர் அவை மழை நீருடன் வந்து அகற்றப்படுகையி லேயே அதன் தாக்கம் முற்றுப் பெறுகின்றது.

### மொன்றியல் பிரகடனம்

1960 ஆம் ஆண்டுகளில் மனித செயற்பாடுகளே ஓசோன் படை நலிவடைதலிற்குப் பிரதான காரணமாக அமைவதாகச் சில விஞ்ஞானிகளால் கூறப்பட்டது. 1974 இல் படைமண்டலத்திலுள்ள ஓசோனின் அழிவுக்கு CFCகள் முக்கிய பங்கு வகிக்கின்றன என்ற கருதுகோள் உருவாக்கப்பட்டது.

இதுவே ஓசோன் படையின் பாதுகாப்பிற்கான வியன்னா ஒப்பந்தம் 1985இல் ஏற்படக் காரணமாகியது. மனிதனின் நலனிற்கும் சூழலிற்கும் பாதிப்பை ஏற்படுத்தும் புற ஊதாக் கதிர்களிலிருந்து பூமியைப் பாதுகாக்கச் சகல நாடுகளும் பொறுப்புணர்வுடன் செயற்பட்டு ஓசோன் படை நலிவடைதலைத் தடுக்கும் செயற்பாடுகளில் ஈடுபடல் வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது. இதுவே மொன்றியல் பிரகடனம் ஏற்படுவதற்கான அடித்தளமாக அமைந்தது.

புரட்டாதிமாதம் 1987 ஆம் ஆண்டு 27 நாடுகள் மொன்றியலில் ஒன்றுகூடி மொன்றியல் பிரகடனத்தை ஏற்படுத்தின. இப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது, 1999 ஆம் ஆண்டளவில் CFC பாவனையாது 1986 ஆம் ஆண்டுப் பாவனையின் 50% ஆகக்குறைவடைதல் வேண்டும் என்பதாகும்.

1990 ஆம் ஆண்டில் லண்டனில் நடைபெற்ற மாநாட்டில் இப் பிரகடனத்துக்கு 80 நாடுகளின் ஆதரவு கிடைக்கப் பெற்றது. இம் மொன்றியல் பிரகடனத்தின் பின்னர் CFCக்குப் பதிலாகப் பயன்படுத்தக்கூடிய, அதன் விரும்பத்தக்க இயல்புகளையுடைய ஆனால் ஓசோனுடன் தாக்குத் திறனற்ற மாற்றுப் பொருட்களின் உற்பத்தியில் நாடுகள் கூடிய கவனமெடுத்தன.

இம்முயற்சியின் விளைவே ஹைட்ரோ குளோரோ புளோரோ காபன் (HCFC) அறிமுகமாகும். CFCக்குப் பதிலாக ஹைட்ரோ குளோரோ புளோரோ காபன் பயன்படுத்தப்படுகையில் இதிலுள்ள கூடியளவு ஐதரசனின் அளவால் HCFC இன் தாக்குதிறன் CFC உடன் ஒப்பிடுகையில் கூடியதாகக் காணப்படுகின்றது. இதன் காரணமாகப் புவிமேற்பரப்பிலேயே இதன் வாழ்க்கைக் காலம் முடிவடைகின்றது. வாயு நிலையிலுள்ள சேதனப் பதார்த்தங்களிலுள்ள (egHCFC) ஐதரசன் அணு OH உடன் தாக்கத்துக்கு உட்படுவதனால் HCFC தாக்குதிறன் கூடியதாகக் காணப்படுகின்றது.

ஆனால் இத்தகைய தாக்கங் கள் CFC இல் நடைபெறுவதில்லை. எனவே CFC கூடிய நிலைத்திருத்தலுடையது. HCFC ஆனது கூடுதலான தாக்குதிறனுடையதாக இருப்பதனால் குறைந்த உறுதித் தன்மையையும், விரைவில் தீப்பற்றக் கூடியனவாகவும் உள்ளதால் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் CFCக்குப் பதிலாக இதனைப் பயன்படுத்தமுடியாதுள்ளது.

ஹைட்ரோ புளோரோ காபனும் (HFC), CFC க்குப் பதிலாகப் பயன்படுத்தப்படுகின்றது. C-F பிணைப்பானது ($484KJmol^{-1}$) C-Cl பிணைப்பை விட ($338KJmol^{-1}$) கூடிய பிணைப்பு.சக்தியுடையது. எனவே C-F பிணைப்பு சூரியசக்தியால் பிரிகையடைய மாட்டாததாகக் காணப்படுகின்றது. இருப்பினும் HFC கூடிய வாழ்தகவுடையதால் புவிமேற்பரப்பில் கூடியளவில் தேங்கி, IR கதிர்களை உறிஞ்சும் ஆற்றலால் புவிமேற்பரப்பு வெப்பமடைதலுக்குக் காரணமாக அமைகின்றது. HFC குறைந்த தீப்பற்றும் இயல்பைக் கொண்டிருப்பதனாலும் Clஐக் கொண்டிராமையாலும் ஓசோனை அழிவடையச் செய்தல் குறைவாகும். ஆனால் இதனை உற்பத்தி செய்தல் மிகவும் செலவு கூடிய செயன்முறையாகும்.

படைமண்டலத்தில் காணப்படும் ஓசோனின் செறிவு உலக ரீதியாக 1950இன் நடுப்பகுதியிலிருந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றது. ஓசோன் படையில் குறைவு ஏற்படல் ஒரு வருடாந்த செயற்பாடாக உள்ளது. 1956 -1966 ஆம் ஆண்டுகளின் சராசரி ஓசோன் படையானது 314 DU (Dobson Units) ஆகக் காணப்பட்டது.

2000-2003 ஆண்டளவில் இதன் தடிப்பு 150 DU ஆகக் குறைவடைந்துள்ளது.

மேற்குலக அபிவிருத்தியடைந்த நாடுகள் கைத்தொழில் மற்றும் விவசாய அபிவிருத்தியில் உயர்நிலையில் காணப்பட்டு பல் வேறுபட்ட இரசாயனப் பதார்த்தங்களைப் பிரதானமாக உற்பத்தி செய்கின்றன. இவ்வுற்பத்திகளின் போது பக்க விளைவுகளாக உருவாகும் வாயுக்கள் வளி மண்டலத்தில் அதிகமாகக் காணப்படுகின்றன.


ஆனால் இவ்வாயுக்களின் தாக்கமானது வட தென் துருவங்களிலேயே மிகவும் அதிகமாகக் காணப்படுகின்றது. இப்பிரதேசத்தில் காணப்படுகின்ற பிரத்தியேக காலநிலை மாற்றங்களே இதற்குக் காரணமாகின்றது.


தென்துருவத்தில் மாரிகாலத்தின் போது மிகக்கூடிய குளிர் நிலவுவதாலும், பூமியின் சுழற்சியாலும் தென்துருவத்தை நோக்கி ஒரு காற்றோட்டம் உருவாகி சுழல் காற்றைத் தோற்றுவிக்கின்றது.

எனவே பெரும்பாலான நாடுகளால் உருவாக்கப்படும் வாயுநிலை இராசயனப் பொருட்களின் தாக்கமானது அந்நாடுகளில் பாதிப்பை ஏற்படுத்தாது துருவப் பிரதேசங்களில் பாரியளவு பாதிப்பை ஏற்படுத்தக் காரணமாகின்றது. இதற்கு உதாரணமாக அந்தாட்டிக் மற்றும் ஆட்டிக் பிரதேசங்களில் ஏற்பட்ட ஓசோன் படை நலிவைக் குறிப்பிடலாம்.

எனவே சகல உலக நாடுகளும் ஒன்று சேர்வதன் மூலமே இப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும் என்பதால் சகல நாடுகளும் ஓசோன்படை நலிவடைதலைத் தூண்டும் இரசாயனப் பதார்த்தங்களை உற்பத்தி செய்தலைத் தடுத்து அவற்றுக்குரிய மாற்றுப் பொருட்களின் உற்பத்தி யில் ஈடுபடுவதன் மூலம் ஓசோன் படை நலிவடைதலைத் தடுத்தல் முடியும். அத்துடன் ஓசோன் படையின் அளவை ஆரம்ப நிலையின் அளவிற்கு மாற்றுவதற்கு மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகள் மற்றும் கண்டுபிடிப்புகளில் ஈடுபடுவதன் மூலம் ஓசோன் படையின் அளவை ஆரம்ப நிலையின் அளவிற்கு மாற்றமடையச் செய்யவதன் மூலம் உயிரங்கிகளைப் புற ஊதாக் கதிர்களின் தாக்கத்திலிருந்து பாதுகாக்கவும் முடியும். (முற்றும்)

**செல்வச்சந்திரன் மாலதி,**
இரசாயனவியல்துறை
(உதவி விரிவுரையாளர்)
விஞ்ஞானபீடம்







யாழ்.மாநகரசபை எல்லைக்குள் நடைபெறும் வேலைத் திட்டங்கள் தொடர்பாக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, யாழ்.மாநகரசபை முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா, மாநகரசபை உறுப்பினர்கள் நேற்று கலந்துரையாடலில் ஈடுபட்டதையும் கலந்துரையாடலில் பங்குபற்றியோரையும் அத்தோடு முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களை ஆளுநர் நேரில் சென்று பார்வையிடுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

# பிரபாகரனின் மெய்ப்பாதுகாவலர் இலட்சுமணன் இந்தியாவில்!


டாக்டர் கமலினி

"உயிருடன் உள்ளார் பிரபாகரனின் மெய்க்காப்பாளர்" என்ற தலைப்பில் "நக்கீரன்" சஞ்சிகை வெளியிட்டுள்ள கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது.

"முள்ளிவாய்க்கால் கொடூரத்தை உணர்வுள்ள உண்மைத் தமிழர்கள் ஒருவராலும் மறக்கவே முடியாது. அது முடிவல்ல, அடுத்த கட்ட உரிமைப்போருக்கானத் தொடக்கம் என்ற நம்பிக்கையை மேலும் அதிகரிக்கச் செய்திருக்கிறது இந்த சம்பவம்"




நான்காம் கட்ட ஈழப்போர் உச்சகட்டத்தில், இருந்த நேரம். முள்ளிவாய்க்கால் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த தற்காலிக மருத்துவமனையில்,உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த தமிழ் உயிர்களுக்குச் சிகிச்சை அளித்துக்கொண்டிருந்தார் டாக்டர் கமலினி. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கதிர்காமர்-ராஜம்மாள் தம்பதியரின் மகள்தான் கமலினி.

கறுப்பையா வள்ளியம்மா


பத்மாகவி

யாழிலேயே மருத்துவப்படிப்பு படித்து, போர்ச் சூழலுக்கிடையிலும் தடைப்பட்ட படிப்பினைத் தொடர்ந்து டாக்டரானவர். விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இயங்கிய மருத்துவமனைகளில், மனிதநேயத்தோடு செயல்பட்டுக் கொண்டிருந்தார்.

தமிழகத்தின் சிவகங்கையிலிருந்து முந்தைய தலைமுறைகளில் ஈழத்திற்குச் சென்ற கறுப்பையா, திருகோணமலை வள்ளியம்மாளைத் திருமணம் செய்துகொண்டு மன்னார் மாவட்டம் அடம்பனில் வசித்து வந்தார். அங்கு 60 ஏக்கர் நிலம் இவர்களுக்குச் சொந்தமாக இருந்தது. இந்தத் தம்பதிக்கு 11 குழந்தைகள். அவர்களில் நான்காவதாகப் பிறந்தவர்தான் அசோகன். 1982இல் 10ஆம் வகுப்பு படிக்கும்போதே விடுதலைப்புலிகள் இயக்கத்தில் சேர்ந்தார். அசோகனுக்கு இயக்கத்தில் இலட்சுமணன் எனப் பெயர். விடுதலை வேட்கையும் வீரமும் அவரைப் படிப்படியாக உயர்த்தி, புலிகள் இயக்கத்தின் லெஃப்டினென்ட் கேணலாக்கி, இயக்கத் தலைவர் பிரபாகரனின் மெய்க்காப்பாளர் என்ற நிலைக்கு உயர்த்தியது.

இலட்சுமணனுக்குத் திருமணம் செய்துவைக்க வேண்டும் என்று அவரது குடும்பத்தினர் ஆசைப்பட்டதை இயக்கம் அறிந்தது. டாக்டர் கமலினியை இலட்சுமணனுக்கு கல்யாணம் செய்துவைக்கலாம் என்ற எண்ணம் ஏற்பட, அதற்கான முயற்சிகளை மேற்கொண்ட புலிகளின் காவல்துறைப் பிரிவுத் தலைவராக இருந்த (பின்னாளில் புலிகளின் அரசியல் பிரிவு பொறுப்பாளர்) நடேசன் இதனை பிரபாகரனிடம் தெரிவித்து, சம்மதம் பெற்றார். இலட்சுமணனுக்கும் கமலினிக்கும் திருமணம் நடந்தது. இந்தத் தம்பதியருக்கு கோமகள், யதுவர்மன், இசைவிழி என மூன்று குழந்தைகள்.

யுத்தம் கடுமையாக நடந்து கொண்டிருந்த நேரத்தில், பிரபாகரனின் மெய்க்காப்பாளரான இலட்சுமணன் தனது தலைவரின் உயிரைப் பாதுகாக்கும் பொறுப்பில் கண்ணும் கருத்துமாக செயல்பட்டு வந்தார். புலிகள் பின்னோக்கி நகர்ந்துகொண்டிருந்த நேரத்தில் இலட்சுமணன் குடும்பத்தினரும் கமலினி பெற்றோரும் அவர்களுடனேயே தொடர்ந்து சென்று கொண்டிருந்தார்கள். கறுப்பையா தனது லொறி, உழலு இயந்திரம் அனைத்தையும்

## இவர் இருக்கிறார் என்றால் அவர்?

## விரைவில் தகவல் வரும் என்கிறது நக்கீரன்

இயக்கத்திற்காகவும் இடம்பெயரும் ஈழமக்களுக்காகவும் பயன்படுத்தினார்.இந்தப் பயணத்தின்போது உறவினர்கள் ஒவ்வொருவராக, இராணுவத் தாக்குதலில் பலியாகிக்கொண்டே இருந்தார்கள்.

முள்ளிவாய்க்கால் மருத்துவ மனையில் சிகிச்சையளிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த கமலினி, ஒரு மதியப் பொழுதில் சாப்பிடுவதற்காக சாப்பாட்டுப்பெட்டியை திறந்த நேரத்தில், மருத்துவமனை மீது இராணுவம் நடத்திய ஷெல் தாக்குதலில், கமலினியின் தலையில் நேராக குண்டு பாய்ந்து, அந்த இடத்திலேயே அவர் இறந்தார்.பெண் மருத்துவர் உயிரிழந்த செய்தி அப்போது உலக நாடுகளில் உள்ள தமிழர்கள் அனைவரையும் அதிரவைத்தது.

இந்தக் கொடூரத்திற்குப்பின், குழந்தைகளையும் உறவினர்களையும் பத்திரமாக வெளியே அனுப்பிவிடும்படி இல்ட்சுமணனிடம் பிரபாகரன் தெரிவித்ததையடுத்து, தமிழகத்தின் கும்மிடிப்பூண்டி முகாமிற்கு ஏற்கனவே வந்துவிட்ட தனது தம்பி தாடி கணேசன், அக்கா வசந்தகுமாரி ஆகியோரிடம் அவர்களை அனுப்பிவைக்க ஏற்பாடு செய்தார் இலட்சுமணன்.

யுத்தத்தின் கடைசி கட்டத்தில், முள்ளிவாய்க்காலிலிருந்து இராணுவப் பகுதிக்கு இடம்பெயர்ந்து வந்தவர்களோடு இலட்சுமணன்-கமலினியின் பெற்றோர்கள் இடம்பெயர்ந்து வன்னி முகாமுக்கு வந்து, அங்கிருந்து படகு மூலமாக கொழும்பு அடைந்து, சிங்கள அதிகாரிகள் மூலம், விமானம் மூலம் தமிழகம் சென்றனர். கமலினி பெற்றோரை விருகம்பாக்கத்தில் வீடு பிடித்து தங்க வைத்தார் தாடி கணேசன். அவருடைய பெற்றோர் கும்மிடிப்பூண்டியில் இருக்கிறார்கள். இந்த நிலையில் 3 குழந்தைகளும் யாருடைய பராமரிப்பில் இருப்பது என்பதில் இரு குடும்பத்தாருக்கும் சர்ச்சை ஏற்பட்டது.


**நக்கீரன்**

கமலினியின் சகோதரர் கிருத்திஹரன் பிரான்ஸ் நாட்டிலிருந்து விருகம்பாக்கம் வந்தார். குழந்தைகளை கனடா, லண்டன், பிரான்ஸ் இங்குள்ள நண்பர்களிடம் அனுப்பி படிப்பு, பராமரிப்பு ஆகியவற்றைக் கவனித்துக் கொள்ளப் போவதாகத் தெரிவிக்க, இலட்சுமணனின் பெற்றோர் உடன்படவில்லை. மூன்று குழந்தைகளில், இசைவிழியை மட்டும் தங்களிடம் இருக்குமாறு பாசப்போராட்டம் நடத்தினர். கிருத்திஹரனோ அம்பத்தூர் தி.மு.க கவுன்சிலர் சுப்பையா துணையோடு போய், இசைவிழியைத் தூக்கிவர, இந்த விவகாரம் மறுவாழ்வுத்துறை ஆணையர் ஜெயக்குமாரிடம் சென்றது.


வசந்தகுமாரி

அவரது சமாதானத்தின் பேரில் இசைவிழி, இலட்சுமணன் குடும்பத்தினரிடம் சேர்க்கப்படுகிறாள். ஆனால், அதை மீறி, வில்லிவாக்கம் எம்.எல்.ஏ ரங்கநாதனின் உதவியையும் நாடிய கிருத்திஹரன், அந்த ஆதரவில் இலட்சுமணனின் சகோதரி வசந்தகுமாரி வீட்டுக்குச் சென்று அவர் கையிலிருந்த குழந்தையைப் பிடுங்கி வருகிறார். அத்துடன், இலட்சுமணன் பெற்றோர், சகோதரர், சகோதரிகள் மீது விருகம்பாக்கம் காவல் நிலையத்தில் கமலினி குடும்பத்தார் தரப்பிலிருந்து இலட்சுமணன் குடும்பத்தார் மீது புகாரும் கொடுக்கப்படுகிறது.

தாடிக்கணேசன்




இதனிடையே, இலட்சுமணனின் பெற்றோருக்கு விடுதலைச்சிறுத்தைகள் பகுதிச் செயலாளர் முத்து முகமது உதவியாக இருக்கிறார் என்ற தகவல் வர, இது பற்றி திருமாவளவனிடம் ரங்கநாதன் பேசியுள்ளார். பெற்றோர் துணையில்லாத குழந்தைகளின் நிலைமை அரசியல்-பொலிஸ் என திசைமாறிக் கொண்டிருந்த நேரத்தில்தான், இருப்பிடத்தை வெளிப்படுத்தாமல் இருக்கும் இலட்சுமணனுக்கு இந்தத் தகவல் போய்ச் சேருகிறது. அவர் தனது நண்பர்கள் மூலமாக, இசைவிழியை மட்டும் தனது குடும்பத்தினரின் பராமரிப்பில் விடுமாறும், மற்ற இரு குழந்தைகளும் கமலினி பெற்றோரிடமே இருக்கட்டும் எனத் தெரிவித்திருப்பதையடுத்து, இது குறித்தான பேச்சுவார்த்தைகள் இரு தரப்புக்கும் பொலிஸ் முன்னிலையில் நடந்து வருகிறது. இலட்சுமணன் பெற்றோரும் சகோதர-சகோதரிகளும் நம்மிடம், "இசைவிழியை மட்டும் நாங்கள்


கதிர்காமர், ராசம்மாளுடன் இசைவிழி

11ஆம் பக்கம் பார்க்க..

# குருப்பெயர்ச்சி பலன்கள்

## 21.11.2010 தொடக்கம் 07.05.2011 வரை



### துலாம்

(சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3ஆம் பாதங்கள்)

எதிரிகளின் பலம் கூடும்! இறையருளே காப்பாற்றும்!

*துவளாத உள்ளமும், துடிப்போடு செயலாற்றும் தன்மையும் கொண்ட துலாம் இராசி நேயர்களே!*

குருப்பெயர்ச்சி உங்களுக்கு கொடுக்கும் யோகம் அதிகமாக இருந்தாலும், அதைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு சுய ஜாதகத்தைப் பொறுத்துத்தான் உள்ளது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

காரணம், உங்கள் இராசிநாதன் சுக்ரன் குருவிற்கு பகைவராக விளங்குபவர். இருப்பினும் குரு பார்வைக்கு கோடி நன்மை என்பதற்கேற்ப, அது பார்க்கும் இடங்களெல்லாம் பலன்கள் அதிகம் கிடைக்கும்.

பொதுவாக, ஏழரைச்சனியின் ஆதிக்கம் வேறு நடந்து கொண்டிருக்கிறது. விரயச்சனி என்பதால் கடந்த சில மாதங்களாகவே வரவைக் காட்டிலும் செலவு கூடியிருக்கலாம்.

எண்ணங்கள் எளிதில் நிறைவேறாமல் இப்படி இழுத்தடித்துக் கொண்டிருக்கிறதே என்று சிந்தித்த உங்களுக்கு, இப்பொழுது குருவின் பார்வை அந்த சனியின் மீது பதிவதால் நல்ல மாற்றங்கள் வந்து சேரப் போகின்றன.

எப்படி இருந்தாலும், ஆறாமிடத்தில் சஞ்சரிக்கும் குரு, அடுத்தவர்களை அனுசரித்துச் செல்வதன் மூலமே ஆதாயத்தை வழங்கும். குடும்பத்தில் விட்டுக்கொடுத்துச் சென்றால் தான் உங்கள் விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும்.

நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் எடுக்க வேண்டுமானால், எவரையும் விமர்சிப்பதை தவிர்ப்பது நல்லது. உடனிருப்பவர்கள் மூலம் உபத்திரவங்களை நீங்கள் சந்திக்காதிருக்கவும், கடன் சுமைகளை குறைத்துக் கொள்ளவும், கடவுள் வழிபாடு தான் உங்களுக்கு கைகொடுக்கும்.

குரு புத்திரகாரகன் என்று வர்ணிக்கப்படுபவர். அந்தக்குரு ஆறில் சஞ்சரிக்கும் பொழுது, பிள்ளைகளால் தொல்லைகள் வந்து சேரும். உங்களைக் கேட்காமலேயே உங்கள் பிள்ளைகள் சில முடிவெடுத்து விட்டு, உங்களுக்கு மனக்கவலை தரும் விதத்தில் நட ந்து கொள்ளலாம்.

"ஆணை அடக்கி வளர்!, பெண்ணைப் போற்றி வளர்!" என்று குழந்தை வளர்ப்பைப் பற்றி ஒரு பழமொழி சொல்வர். அந்த அடிப்படையில், உங்கள் குழந்தைகளை கூடுதல் கவனத்துடன் பார்த்துக் கொள்வது நல்லது.

குரு உங்கள் இராசியைப் பார்க்கவில்லை என்றாலும் உங்கள் இராசிக்கு 2, 10, 12 ஆகிய இடங்களைப் பார்க்கப் போகிறார் அல்லவா? எனவே, குருவின் 5, 7, 9 ஆகிய பார்வைகள் பதியும் இடங்கள் எல்லாம் புனிதமடையும் என்பது சாஸ்திர நியதி. அந்தக் குரு எந்த இடத்தில் இருந்து பார்க்கிறதோ அதற்குரிய பலன்களையும் சேர்த்து வழங்கும்.

சுமார் ஐந்தரை மாதங்கள் மட்டுமே மீனத்தில் சஞ்சரிக்கும் இந்த குரு, இதுவரை கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டும், பணத் தேவைகளைப் பூர்த்தி செய்யும். வளர்ச்சிக்கு ஒத்துழைப்புச் செய்ய வள்ளல்கள் கை கொடுத்து உதவுவர். தொழில் ஸ்தானம் மற்றும் விரயஸ்தானம் ஆகியவற்றையும் குரு பார்ப்பதால், தொழில் வளர்ச்சி கூடினாலும், அதிலிருந்துவரும் ஆதாயம் கைக்குக் கிடைக்காது.

உடனுக்குடன் விரயமாகும் சூழ்நிலை உருவாகும். கூட்டாளிகளை நம்பிச் செய்யும் செயல்களில் கூடுதல் விழிப்புணர்ச்சி காட்டுவது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர் கள் உண்மை எது? பொய் எது? என்பதை அறிந்து செயற்படாவிட்டால், எதிர்பாராத மாற்றங்களைச் சந்திக்க நேரிடும். எல்லாவற்றிற்கும் மேலாக காலச் சக்கரத்தைச் சுழற்றும் கடவுளை நீங்கள் கைகூப்பி தொழுதால் ஞாலத்தில் வரும் இடர்கள் தானாகவே அகலும்.

**நீங்கள் நன்றி மறக்காத குணத்தைப் பெற்றவர்கள்!**

ஒருமுறை ஒருவர் செய்த உதவியை எத்தனை ஆண்டுகளானாலும் நீங்கள் மறக்கமாட்டீர்கள். நன்றி மறக்காத குணம் உங்களுக்கு உண்டு.

நீதிக்கும், நேர்மைக்கும் நீங்கள் முக்கியத்துவம் கொடுப்பதால் உங்களுக்கென்று ஒரு தனிக்கூட்டம் இருக்கும். அழகை இரசிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள். ஆன்மீக நாட்டம் உங்களுக்கு அதிகரிக்கும் பொழுதுதான், வாழ்க்கையில் வளர்ச்சிப்பாதை தென்படுகிறது என்பதை நீங்கள் அனுபவத்தில் காணலாம்.

அள்ளிக் கொடுப்பதில் வல்லவரான சுக்ரன், உங்களுக்கு செல்வத்தைக் கொடுக்கலாமே தவிர, சேர்ந்த வாழ்க்கைத்துணையால் நிம்மதியைக் கொடுக்குமா? என்பதை உங்கள் சுய ஜாதகத்தைப் பொறுத்தே முடிவெடுத்துக் கொள்ள இயலும். திருமணப் பொருத்தங்கள் தித்திக்கும் விதத்தில் இருந்தால்தான் அருமை மனைவியின் ஆதரவும், அன்பு மிகுந்த தாம்பத்யமும் உங்களுக்கு அமையும்.

இரக்க குணத்தைப் பெற்றிருந்தாலும், அரக்க குணமும் சிலசமயங்களில் தலை தூக்கும். இப்படிப்பட்ட குணங்களைப் பெற்ற உங்களுக்கு இந்தக் குருப்பெயர்ச்சி இனிய பலன்களைக் கொடுக்குமா? என்பதை பற்றி பார்ப்போம்?

***ஆறினில் குருதான் வந்தால்***

*அனைத்திலும் கவனம் தேவை*
*போரிடும் குணத்தை நீக்கி*
*பொன்னான குணத்தை ஏற்றால்*
*சீரான வாழ்க்கை சேரும்!*
*செல்வங்கள் வந்து கூடும்!*
*ஏராளம் பலன் கிடைக்க*
*இறையருள் தானே வேண்டும்!*

என்று ஜோதிட சாஸ்திரம் கூறுகிறது.

அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது ஆறில் வந்த குரு அனைத்து வழிகளிலும் மாற்றங்கள் வழங்க வேண்டுமானால் போரிடும் குணத்தை நீக்கி பொன்னான குணத்தை மேற்கொள்ள வேண்டும். எந்தச் செயலையும் யோசித்துச் செய்வதன் மூலம் யோகங்களை வரவழைத்துக் கொள்ளலாம். உடலில் தோன்றும் வியாதிகளை உடனுக்குடன் பார்த்துக் கொள்வது நல்லது.

**விருப்பங்கள் நிறைவேற்றும் வியாழனின் பார்வை!**

குரு பார்த்தால் இடையூறுகள் அனைத்தும் விலகிவிடும் என்பது முன்னோர் வாக்கு. அந்த குருவின் பார்வை பதியும் இடமாக இருக்கும் வாக்கு, தனம், குடும்பம் என்னும் இடம் வலுவடைவதால் நீங்கள் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இயலும். கொள்கைப் பிடிப்பு இருந்தும், அதைச் செயல்படுத்த முடியவில்லையே என்ற கவலை அகலும், திணறடித்துக் கொண்டிருந்த பொருளாதார நெருக்கடிகளைச் சமாளிக்கும் விதத்தில் கைக்குப் பணம் வந்து கொண்டேயிருக்கும்.

குடும்பத்திற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் முதல் ஆடம்பரப் பொருட்கள் வரை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேரும். எப்படியென்றாலும் அவர்கள் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுகிறார்களா என்பதை அறிந்து செயற்படுவது நல்லது. உயர்ந்த மனிதர்களின் நட்பும், ஆதரவும் கிடைக்கும்.

குருவின் பார்வை பலன் 10ஆம் இடத்தில் பதிவதால் செயல் ஸ்தானம் பலன் பெறுகிறது. செய்யும் செயல்களில் இருந்த சிக்கல்கள் அகலும். சிறு, சிறு பிரச்சினைகள் குடும்பத்தில் தலைதூக்கினாலும் அதைச் சமாளித்து விடுவீர்கள். விலையுயர்ந்த பொருட்களைக் கையாள்வதில் கவனம் தேவை. குழந்தைகளின் கல்வி நலன் கருதி எடுத்த முயற்சியில் எதிர்பார்த்த அளவு வெற்றி கிடைக்குமா? என்பது சந்தேகம் தான்.

7½ சனிஒருபக்கம், ஒன்பதாமிடத்து கேது மற்றொரு பக்கம். உங்கள் வளர்ச்சியால் தளர்ச்சியையே ஏற்படுத்திக்கொண்டிருக்கும். திடிரென தொழில் மாற்றம் செய்யலாமா என்று யோசிப்பீர்கள். பின் இதே தொழிலில் நீடிக்கலாமா என்று நினைப்பீர்கள். வேலையில் இருப்பவர்கள் வி.ஆர்.எஸ். வாங்கிக் கொள்ளும் எண்ணத்தை வளர்த்துக் கொள்வார். பின் அது வேண்டாம் தொடர்ந்து வேலையில் நீடிக்கலாம் என்று சொல்வீர்கள். சலனங்கள் அதிகரிக்கும் இந்த நேரத்தில் எடுக்கும் முடிவுகளை யோசித்து எடுப்பது நல்லது. பெரியவர்களின் ஆலோசனைக்களைக் கேட்டு நடப்பதன் மூலம் பிரச்சினைகளில் இருந்து விடுபடலாம். பெற்றோர்களிடம் பாசமாக நடந்து கொள்வது நல்லது. பொது நலத்தில் இருப்பவர்களுக்குப் புதிய பொறுப்புகள் வந்து சேரும்.

குருவின் பார்வை அயன சயன ஸ்தானம் எனப்படும் 12 ஆம் இடத்தில் பதிவதால் பயணங்கள் அதிகரிக்கும். தொழில் அதிபர்களாக இருப்பவர்கள் இன்று இத்தாலி, நாளை நோர்வே, மறுநாள் மொஸ்கோ என்று சுற்றிக் கொண்டே இருப்பீர்கள். அலைச்சல் கூடும் இந்த நேரத்தில் ஆதாயமும் கிடைக்கும். நீண்ட தூரப் பயணங்களை சிலர் மேற்கொள்வர். சுற்றத்தாரின் வீடுகளில் நடைபெறும் சுப நிகழ்ச்சிகளுக்கு நீங்கள் கொடுத்து உதவி செய்வீர்கள். பால்ய நண்பர்

**சிவல்புரி சிங்காரம்**

களின் உதவியால் புது முயற்சி ஒன்று கைகூடும்.

மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக்கவலைகள் மாறும். கோவில் திருப்பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். அந்நிய தேசத்திலிருந்து அழைப்புகள் வந்து சேரும். அஞ்சல் வழியில் வரும் செய்தி ஆச்சரியப்பட வைக்கும். எடுத்த முடிவை உடனுக்குடன் மாற்றும் சூழ்நிலை கூட ஒருசில சமயங்களில் உருவாகலாம். நடக்கும் தொழிலை விட்டுவிட்டு வேறு தொழிலை நாடிச் செல்வீர்கள். வீடு மாற்றங்கள் தானாகவே வந்து சேரலாம்.

**செல்வ வளம் தரும் சிறப்பு வழிபாடு**


ஆறாமிடத்துக் குருவால் அற்புத பலன்கள் வந்து சேர குருவை புனர்பூசம் நட்சத்திரத்தன்று வழிபட்டு வந்தால் புதிய வாழ்க்கை மலரும்.

**துலாம் இராசிப் பெண்களுக்கு வரவும்-செலவும் சமமாகும்!**

துலாம் இராசியில் பிறந்த பெண்களுக்கு உறவும் பகையும் மாறி மாறி வரும். உங்கள் பிள்ளைகளின் வளர்ப்பில் அதிக கவனம் செலுத்துங்கள். குருவின் பார்வை தனஸ்தானத்திலும், விரயஸ்தானத்திலும் பதிவதால், ஒரு பங்கு வரவு வந்தாலும், இருமடங்கு செலவாகலாம். அரசியல் மற்றும் பொது நலத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் வீண் பழிகளுக்கு ஆளாக நேரிடும் என்பதால், விழிப்புணர்ச்சியோடு இருப்பது நல்லது. விருந்தினர் வருகை அதிகரிக்கும். கணவன்-மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் ஏற்படாமல் இருக்க அனுசரித்துச் செல்வதே நல்லது. முறையான சர்ப்ப சாந்தி முன்னேற்றத்திற்கு வித்திடும். (தொடரும்)








ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் சொண்ட் நிறுவனத்தினால் தெரிவு செய்யப்பட்ட 10 பொது இடங்கள் மற்றும் பாடசாலைகளுக்கு தண்ணீர் தாங்கி மற்றும் தண்ணீர் தாங்கி நிறுத்தி என்பன வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் நிறுவன திட்டப்பணியாளர் த.திருமாறன் உரையாற்றுவதையும் லிட்டில் பிளவர் பாடசாலை மற்றும் சென்மேரீஸ் பாடசாலைகளுக்கு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊர்காவற்றுறை பொறுப்பாளர் க.காந்தன் தோழர் மற்றும் ஊர்காவற்றுறை பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் தெ.கிருபைநாதன் ஆகியோர் தண்ணீர்தாங்கி வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# ஜனாதிபதியுடன் பேசுவார் அமைச்சர் விமல் வீரவன்ஸ



யாழ்ப்பாணம் தேசிய வீடமைப்பு அதிகார சபைக்குரிய காணியில் குடியேறியுள்ள சிங்களக் குடும்பங்கள் குறித் துத் தீர்மானம் எதுவும் மேற்கொள்ளப் பட வில்லை என வீடமைப்பு நிர்மாணத் துறை பொறியியல் சேவைகள் அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

தம்மை யாழ்ப்பாணத்தில் குடியேற்ற வலியுறுத்தி யாழ்.ரயில் நிலையத்தில் தங்கியிருந்த 67 குடும்பங்கள் நாவற்குழியிலுள்ள தேசிய அதிகாரசபைக்குச் சொந்தமான காணியில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு குடியேறியுள்ளனர்.

இதுதொடர்பில் அமைச்சர் விமல் வீரவன்ஸவிடம் கேட்டபோது இது குறித்து எமக்குத் தகவல் கிடைத்துள்ளது. ஆனால் அக்குடும்பங்களை அங்கு தங்குவதற்கு அனுமதிப்பதா? அல்லது வெளியேற்றுவதா?என்பது குறித்து நாம் தீர்மானம் எதனையும் மேற்கொள்ளவில்லை. இவ்விடயம் குறித்து ஜனாதிபதியுடன் கலந்துரையாடிய பின்னரே தீர்மானம் மேற்கொள்ளப்படும் என்றார். (ச-5)

# புத்தளத்தில் சக்தி வாய்ந்த கிளைமோர் குண்டுகள் மீட்பு

(கொழும்பு)

புத்தளம் மாவட்டத்தின் கற்பிட்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தலுவ பகுதியில் இருந்து சக்திவாய்ந்த ஏழு கிளைமோர் குண்டுகள் உட்பட பெருமளவான வெடிபொருட்களும் கடந்த 8ஆம்திகதி மீட்கப்பட்டுள்ளது.

கடந்த 8ஆம் திகதி மாலை மேற்படி பிரதேசத்துக்கு கொழும்பில் இருந்து வந்த பயங்கரவாத தடுப்புப் பிரிவினரே மேற்படி வெடி பொருட்களை மீட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அண்மையில் இப்பகுதியில் கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞன் வழங்கிய தகவலின் அடிப்படையில் ஏழு சக்தி வாய்ந்த கிளைமோர் குண்டுகள், 510 கிலோ நிறையுடையவெடி மருந்துகள், வயர்கள், ரிமோட் மற்றும்பல பொருட்கள்மீட்கப்பட்டதாகபயங்கரவாத தடுப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

மீட்கப்பட்ட பொருட்கள் அனைத்தும் கொழும்புக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர்கள் இது தொடர்பில் தொடர்ந்து விசாரணை இடம்பெற்று வருவதாக தெரிவித்தனர். (ஸ்ரீ-2)

# பி.பி.சிக்கு மீண்டும் தடை

யாழ்ப்பாணம் செல்லவும் தேசிய நல்லிணக்க ஆணைக் குழுவின் அமர்வுகளில் பங்கேற்க வும் பி.பி.சிக்கு அனுமதி வழங்க பாதுகாப்பமைச்சு அனுமதி மறுத்து விட்டது.

ஆனால் அனுமதி மறுப்புக்கான காரணங்கள் எவையும் தெரிவிக்கப்படவில்லை. ஆணைக் குழுவின் அமர்வுகளில் பி.பி.சி. பங்கேற்க முடியாத வகையில் கடந்த இரு மாதங்களுக்கு இடையில் இரண்டாவது தடவை யாக பி.பி.சிக்கு தற்போது அனுமதி மறுக்கப்பட்டு இருக்கின்றது. (ஸ்ரீ-2)

# கொழும்பில் கடும் மழை காரணமாக வீதிகள் வெள்ளத்தில் மூழ்கின

(கொழும்பு)

கொழும்பில் நேற்று முன்தினம் மாலை முதல் பெய்துவரும் அடை மழை காரணமாக பல வீதிகள் வெள் ளத்தில் மூழ்கியுள்ளன. இதனால் பொதுப் போக்குவரத்திற்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

முக்கியமான வீதிகளிலும் சந்திகளிலும் வெள்ள நீர் தேங்கி நிறைந்திருப்பதால் மாற்று வழிகளில் தமது பயணத்தை மேற்கொள்ளுமாறு சாரதிகள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். தமது பயணங்களுக்காக முடிந்தவரை பொதுப்போக்குவரத்தைப் பயன்படுத்துமாறு பயணிகள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

வெள்ளம் காரணமாக ஏற்பட்டுள்ள வாகன நெரிசல்களைக் கட்டுப்படுத்துவதற்காக முக்கியமான இடங்களில் போக்குவரத்துப் பொலிஸார் போக்குவரத்து ஒழுங்கு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். (ஸ்ரீ-2)




மக்கள் வங்கி விளையாட்டுக்கழகத்தால் நடத்தப்பட்ட 2010 ஆம் ஆண்டுக்கான பிராந்திய மற்றும் வலய மட்டங்களுக்கிடையிலான விளையாட்டு நிகழ்வு அண்மையில் குருநாகல் வெலகெதர மற்றும் மாலிகபிட்டிய மைதானங்களில் நடைபெற்றது.இந்நிகழ்வில் யாழ். பிராந்திய கிரிக்கெட் அணியும் வலைப்பந்தாட்ட அணியும் பங்கு பற்றி தமது திறமைகளை வெளிப்படுத்தினர். இதில் வலைப்பந்தாட்ட அணி இரண்டாம் இடத்தைப்பெற்றது. அவ்வணியினரை படத்தில் காணலாம்.

2010.11 12

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 0764 - திபெத்தியப் படைகள் சீனாவின் டாங் மக்களின் தலைநகரான சங்கான் நகரை 15 நாட்கள் கைப்பற்றி வைத்திருந்தன.
- 1833 - அலபாமாவில் லியோனீட் விண்கற்கள் வீழ்ந்தன.
- 1893 - அன்றைய பிரித்தானிய இந்தியாவுக்கும் (தற்போதைய பாகிஸ்தான்) ஆப்கானிஸ்தானுக்கும் இடையேயான எல்லைக்கோடு கீறப்படுவதற்கான உடன்பாடு எட்டப்பட்டது.
- 1905 - நோர்வே மக்கள் வாக்கெடுப்பு மூலம் குடியாட்சியை விட மன்னராட்சியே சிறந்தது எனத் தெரிவித்தனர்.
- 1906 - பாரிசில் அல்பேர்ட்டோ சாண்டோஸ்-டியூமொண்ட் வானூர்தி ஒன்றைப் பறக்கவிட்டார்.
- 1918 - ஆஸ்திரியா குடியரசாகியது.
- 1927 - லியோன் ட்றொட்ஸ்கி சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்து நீக்கப்பட்டார். ஜோசப் ஸ்டாலின் சோவியத்தின் முழு அதிகாரத்தையும் கைப்பற்றினார்.
- 1938 - மடகஸ்காரை யூதர்களின் தாயகமாக மாற்றும் நாசி ஜெர்மனியின் திட்டத்தை ஹேர்மன் கோரிங் என்பவர் வெளிக்கொணர்ந்தார்.
- 1941 - இரண்டாம் உலகப்போர்: செவஸ்த போல் நகரில் சோவியத் போர்க் கப்பல் செர்வோனா உக்ரயீனா மூழ்கடிக்கப்பட்டது.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: பிரித்தானியாவின் அவ்ரோ போர் விமானம் ஜெர்மனியின் போர்க்கப்பல் ஒன்றை நோர்வேயில் மூழ்கடித்தது.
- 1948 - டோக்கியோவில் பன்னாட்டு போர்க் குற்றவாளிகளின் நீதிமன்றம் ஒன்று ஏழு ஜப்பானிய இராணுவ அதிகாரிகளுக்கு 2ஆம் உலகப் போரில் இழைத்த குற்றங்களுக்காக மரண தண்டனை விதித்தது.
- 1969 - மை லாய் படுகொலைகள் தொடர்பான உண்மைகளை ஊடகவியலாளர் சீமோர் ஹேர்ஷ் வெளியிட்டார்.
- 1980 - நாசாவின் விண்கப்பல் வொயேஜர் 1 சனிக் கோளுக்கு மிக அருகில் சென்று அதன் வளையங்களின் படங்களை பூமிக்கு அனுப்பியது.
- 1981 - கொலம்பியா விண்ணோடம் இரண்டாவது விண்வெளிப் பயணத்தை இரண்டு வீரர்களுடன் ஆரம்பித்தது.
- 1982 - சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராக யூரி அந்தி ரோப்பொவ் தெரிவு செய்யப்பட்டார்.
- 1982 - போலந்தின் சொலிடாரிட்டி தொழிற்சங்கத் தலைவர் லேக் வலேசா பதினொரு மாத சிறைத்தண்டனைக் குப் பின்பு விடுதலையானார்.
- 1989 - தென்னிலங்கையின் உலப்பனையில் தனது தோட்ட வீட்டில் மறைந் திருந்த மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் றோகண விஜேவீர கைதாகி மறுநாள் கொலை செய்யப்பட்டார்.
- 1990 - இணைய வலை பற்றிய முதலாவது திட்டத்தை ரிம் பேர்னேர் ஸ்-லீ அறிவித்தார்.
- 1991 - கிழக்குத் திமோர், டில்லியில் நடை பெற்ற மாணவர் போராட்டம் இந் தோனேசிய இராணுவத்தினரால் முறிய டிக்கப்பட்டு நூற்றுக்கணக் கான மாணவர்கள் உயிரிழந்தனர்.
- 1994 - இலங்கையின் 5வது ஜனாதிபதியாக சந்திரிகா பண்டாரநாயக்ககுமா ரதுங்கா தெரிவு செய்யப்பட்டார்.
- 1996 - சவுதி அரேபியாவின் போயிங் விமானமும் கசக்ஸ்தானின் இல் யூஷின் விமானமும் புது டில்லிக்கு அருகே நடுவானில் மோதிக் கொண்ட தில் 349 பேர் கொல்லப்பட்டனர்.
- 1998 - கியோட்டோ பிரகடனத்தில் ஆல் கோர் கையெழுத்திட்டார்.
- 2001 - நியூயோர்க் நகரில் டொமினிக்கன் குடியரசு நோக்கிச் சென்ற அமெ ரிக்க விமானம் புறப்பட்ட சில வினாடிக ளில் விபத்துக்குள்ளாகியதில் விமா னத்தில் சென்ற 260 பேரும் தரை யில் இருந்த 5 பேரும் கொல்லப்பட் டனர்.
- 2001 - ஆப்கானிஸ்தானின் காபூல் நகரை விட்டு தலிபான் படைகள் முற்றாக விலகினர்.
- 2006 - முன்னாள் சோவியத் குடியரசான தெற்கு ஒசேத்தியா ஜோர்ஜியாவி டம் இருந்து பிரிந்து செல்ல வாக் கெடுப்பை நடத்தியது.


## பிறப்புகள்

- 1817 - பஹாவுல்லா, பஹாய் சமயத்தைத் தோற்றுவித்தவர் (இ.1892)
- 1866 - சுன் இ சியன், சீனாவின் புரட்சித் தலைவர் (இ.1925)
- 1896 - சலீம் அலி, இந்திய பறவையியல் வல்லுநர் (இ.1987)
- 1920 - வல்லிக்கண்ணன், தமிழ் எழுத் தாளர் (இ.2006)

## இறப்புகள்

- 2001 - சத்குரு சிவாய சுப்ரமணிய சுவாமி, இந்து அமெரிக்க ஆன் மிகவாதி (பி.1927)

**1927 - மகாத்மா காந்தி இலங்கைக்கான தமது முதலாவதும் கடைசியுமான பயணத்தை மேற்கொண்டார்**



# யாழ்ப்பாணத்தில் அரைவாய்மொழிப் பாடல்கள்

01

**கடந்த செப்ரெம்பர் மாதம் 13ஆம் திகதி யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற தமிழ்த்துறை கருத்தரங்கில் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜாவினால் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது.**



அறிமுகம் :-

ஆங்கிலத்தில் Orature என வழங்கும் சொல்லைத் தமிழில் அரைவாய் மொழிப் பாடல் என அழைக்கும் மரபு இன்று பெருவழக்காய் உள்ளது. இன்னும், எழுத்து நிலைப்பட்ட வாய் மொழிப்பாடல் என்றும் ஒரு புடைவாய் மொழிப்பாடல் (Semi oral) என்றும் மூன்றாவது வகையான இலக்கியப் பாரம்பரியம் என்றும், இன்னொரு வகையான வாய்மொழிப்பாடல் மரபு என்றும் அழைக்கின்றனர்.

சுரேஷ் கனகராசா Orature என்பதை வாய்மொழி எழுத்து இலக்கியம் எனத் தமிழாக்கம் செய்துள்ளார்.

தமிழகத்து அறிஞர்கள் Orature ஐ முச்சந்தி இலக்கியம் என்றும், குயிலி இலக்கியம் என்றும் அழைக்கின்றனர்.

தமிழில் நீண்டதோர் வாய்மொழி இலக்கியப் பாரம்பரியம் உண்டு. அவ்வாறே எழுத்து நிலைப்பட்ட இலக்கியங்களுக்கும் நீண்ட வரலாறு உண்டு. சங்கப் பாடல்கள் வாய்மொழியாக வழங்கிப் பின்னர் , எழுத்துருப் பெற்றவையென பேராசிரியர் கைலாசபதி கூறுவார். கைலாசபதியின் கருத்தினை வழிமொழியும் வகையிலே சங்கப் பாடல்களில் வாய்மொழி மரபின் தாக்கம் பெருமளவுக்கு உண்டு என்று செ.வை.சண்முகம் குறிப்பிடுவர்.

நாம் இந்தக் கட்டுரையிலே Orature என்ற சொற்பொருள் விவாதத்தில் ஈடுபடவில்லை. ஈழத்து இலக்கிய மரபில் Orature என மேலைப்புலத்தவர் இனங்காட்டிய இலக்கிய வகை, தொடர்ந்து வந்துள்ளது, என்பதனை மறுக்க முடியாது. பெரும்பாலும், வழக்கிழந்து போகும் Orature மரபினை இனங்கண்டு ஈழத்து இலக்கிய மரபிலே இதன் வகிபாகத்தை முன்னெடுத்தவர்களாகப் பேராசிரியர் கா.சிவத்தம்பி, கலாநிதி செ.யோகராசா, பேராசிரியர் சித்திரலேகா மௌனகுரு போன்றோரைக் குறிப்பிடலாம்.

யாழ்ப்பாணத்தில் நிறையவே நிலவி வந்த இந்தப் பாடல் மரபு பற்றி, வடிவ அடிப்படையிலும், பண்பாட்டியல் கூறுகளின் அடிப்படையிலும் எம்மால் ஏலவே, சில கட்டுரைகள் எழுதப்பட்டன.

கலாநிதி செ.யோகராசா மட்டக்களப்புப் பிரதேசத்திலும், மலையகத்திலும் வழங்கும் அரைவாய் மொழிப் பாடல்கள் பற்றி எழுதிய கட்டுரைகளின் அருட்டுணர்வால் ஏற்பட்டதே யாழ்ப்பாணத்து அரைவாய் மொழிப்பாடல்கள் என்ற இந்தக் கட்டுரையாகும்.

**அரை வாய்மொழிப் பாடல் மரபு**

யாழ்ப்பாணத்தில் அரைவாய் மொழிப் பாடல்களின் வருகையையும், பயன்பாட்டையும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இருந்தே காணமுடிகின்றது. இப் பாடல் மரபுக்கும், அச்சியந்திரத்தின் பயன்பாட்டுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. யாழ்ப்பாணத்திலுள்ள பெரும்பாலான அச்சுக்கூடங்கள் அரைவாய் மொழிப் பாடல்களை அச்சிட்டு வெளியிட்டுள்ளன. பாட்டுக் கட்டுந் திறன் படைத்த பலர், சமூகச் சார்பான செய்திகளை, நிகழ்ச்சிகளை ஏதோ ஒரு பா வடிவிலே சிறுசிறு நூல்களாகவோ, துண்டுப் பிரசுரங்களாகவோ அச்சிட்டு, மக்கள் கூடுமிடங்களிலே பாடிக்காட்டி விற்பனை செய்து வந்துள்ளனர்.

பொதுமக்களை நோக்கிய வகையிலே பாடிக் கையளிக்கப்பட்ட இப்பாடல் மரபு பின்னர், அச்சுப் பிரதிகள் இல்லாதொழிந்த காலத்திலும் மக்கள் மத்தியில் வாய்மொழியாக நின்று நிலவுவதாயிற்று. யாழ்ப்பாணத்து அரைவாய் மொழிப் பாடல்கள் பலவற்றை இன்று, வாய்மொழி மரபாக மாத்திரமே பெற முடிகின்றது. இற்றைக்குச் சில வருடங்களுக்கு முன்னர், (1978, 79) நம்மால் தேடித் தொகுக்கப்பட்ட பாடல்கள் பல அச்சுப் பிரதியிலிருந்து வாய்மொழியாக வழங்கி வந்தவையே என்பதும் குறிப்பிடத்தக்கது. இதனாலே, இவற்றை இயற்றியோரின் பெயர்களை அறிய முடியாதுள்ளது.

யாழ்ப்பாணத்து அரைவாய் மொழிப் பாடல்கள் பலவற்றைப் பாடியோருட் பலர் கல்விப்புலமை இல்லாதவர்கள் என்பது உண்மையே எனினும், கல்விப் புலமையுள்ள சிலரும் அந்த அரைவாய் மொழிப் பாடல்களைப் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஓரளவுக்கு எழுத வாசிக்கத் தெரிந்திருந்தும், பாடல் எழுத முடியாத ஆனால், நன்றாகப் பாடக்கூடிய சிலர் கல்விப் புலமையாளர்களை அணுகிச் சில சமூகச் செய்திகளைப் பாடுவித்தும், அச்சடித்தும் மக்கள் கூடும் இடங்களிலே பாடிக்காட்டி விற்பனை செய்தமைக்கான சான்றுகளும் உள்ளன.

இந்த அரைவாய் மொழிப் பாடல்கள் பல யாப்பு நெறிப்பட்டனவாக அமைந்துள்ளமையும் அவதானிப்புக் குரியது. பழக்கப்பட்ட ஓசை வழிவரும் ஒத்திசைவுப் பாங்கிலே பாடப்பட்ட இந்தப் பாடல்களைப் பாடியவர்கள், ஏதோ ஒரு வர்ண மெட்டையே மனங் கொண்டு பாடி வந்தனர்.அச்சேறிய நூல்களிலும், வர்ணமெட்டைக் குறிப்பிட்டுள்ளமையைக் கண்டுகொள்ளலாம்.

(பாடல்களைக் குறிப்பிடுமிடத்து இதற்கு உதாரணம் காட்டுவோம்)

அரைவாய் மொழிப் பாடல்களைத் திருவிழாக்கள், சந்தைகள் முதலான இடங்களிலே பாடிக் காட்டி விற்பனை செய்வதோடு நாடகங்கள், கூத்துக்களிலே இடைப் பிறவரலாக இப் பாடல்களைப் பாடிக் கையளித்தும் வந்தனர். சாதாரண பொது மக்களுக்குச் சமூகச் செய்திகளை, மாற்றங்களை, பரபரப்பான செய்திகளைச் சொல்வதில் அரைவாய் மொழிப் பாடல் மரபு வெற்றிபெற்றதென்றே கூறவேண்டும். உயர் இலக்கியமெனும் செந்நெறி இலக்கியம் சொல்லாத அல்லது, சொல்லத் தவறிய அல்லது, சொல்ல விரும்பாத செய்திகளை அரைவாய் மொழிப் பாடல்கள் சொல்லியுள்ளன என்பதனை மறுக்க முடியாது.

அரைவாய் மொழிப் பாடல்கள் சிந்து, கும்மி , அம்மானை, கீர்த்தனை முதலிய வடிவங்களிலேயே பெரும்பாலும் பாடப்பட்டன. சிறுபான்மையாக வெண்பா, விருத்தம், அகவல் முதலியவற்றிலே பாடப்பட்டதும் உண்டு.(உதாணம் பின்னர் காட்டுவோம்)

யாழ்ப்பாணத்தில் எழுந்த அரைவாய் மொழிப் பாடல்களை எண்ணிக்கை அடிப்படையிலே நோக்கும்பொழுது, கும்மிப் பாடல்களே பெருமளவுக்குக் காணப்படுகின்றன. இதற்கான பிரதான காரணமாக இரண்டு விடயங்களைக் குறிப்பிடலாம்.

**பேராசிரியர்**
**எஸ்.சிவலிங்கராஜா**

ஒன்று: கும்மிப்பாடல்களின் இசை (ஆடிப் பாடக்கூடிய அம்சம்)

இரண்டு: சமூகச் செய்திகள் சொல்லக்கூடிய வடிவமாக கும்மிப் பாடல்களை 19ஆம் நூற்றாண்டு கல்வியாளர்களும் அங்கீகரித்தமை). (தொடரும்)

# புலிகளின் பிரச்சார நடவடிக்கைகளுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டமை வருத்தமளிக்கின்றது

## அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரசார நடவடிக்கைகளுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளமை வருத்தமளிப்பதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

நாடு கடந்த தமிழீழ இராச்சியம் மற்றும் அமைச்சரவை ஆகியவற்றை புலிகள் உருவாக்கியுள்ளதாகவும் ஜனநாயக ரீதியில் ஆட்சிப் பீடமேறிய அரசாங்கமொன்றுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கப்படும் நிலைமை கவலையளிப்பதாக ஊடக அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடு கடந்த தமிழீழ இராச்சியத்தின் பிரதமராக அறிவிக்கப்பட்டுள்ள உருத்திர குமாரன் அமெரிக்கப் பிரதிநிதிகளுடன் சந்திப்புக்களை நடத்தியுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

உரிய தருணத்தில் அமெரிக்காவுடன் இந்தவிடயம் குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்படும் எனவும் தமிழீழ விடுதலைப் புலிகளினால் திரட்டப்பட்ட நிதியை பயன்படுத்திக் கொள்வதற்காக இந்த நாடு கடந்த தமிழீழ இராச்சியம் உருவாக்கப்பட்டுள்ளதெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.(ஸ்ரீ-2)

# தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்குத் தயார்

## மலையக மக்கள் முன்னணி தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்துப் பேச்சு நடத்துவதற்காக அனைத்து தமிழ் கட்சிகளும் ஒன்றிணையுமாயின் அதில் மலையக மக்கள் முன்னணியும் இணையத் தயார் என அக் கட்சியின் தலைவி சாந்தினி சந்திரசேகரன் தெரிவித்தார்.

நேற்றுக் காலை கொழும்பில் இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அத்துடன் தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பில் பேச்சு நடத்தும் தமிழ்க் கட்சிகளின் அரங்கத்தில் இணைவது தொடர்பில் எமது கட்சி இதுவரை தீர்மானிக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் எதிர்காலத்தில் சாதகமான தீர்மானம் எடுப்போம் எனவும்தமிழ்க் கட்சிகள் என்று மாத்திரமல்லாமல் முஸ்லிம் கட்சிகளுடனும் பேச்சு நடத்த தயார் எனவும் அவர் கூறினார்.

முன்னாள் அமைச்சர் சந்திரசேகரனின் மறைவையடுத்து மலையக மக்கள் முன்னணியில் தலைவியாக சாந்தினி சந்திரசேகரன் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ)

# அகில உலக அகண்ட பஜனை

(யாழ்ப்பாணம்)

உலகம் முழுவதும் அமைதியும் சாந்தியும் நிலவ வேண்டும் என்பதற்காக 175 நாடுகளிலுமுள்ள பல்லாயிரக்கணக்கான சாயி நிலையங்களிலும் ஒரேநேரத்தில் 24 மணி நேர பஜனை நடைபெறுவதற்கு பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபா ஏற்பாடு செய்துள்ளார்.

இதற்கமைய நாளை சனிக்கிழமை மாலை 6 மணி தொடக்கம் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணி வரை யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் அகில உலக அகண்ட பஜனை நடைபெறவுள்ளதாக யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையம் அறிவித்துள்ளது. (ஸ்ரீ)



யாழ்.ஏழாலை வடக்கு அ.மி.த.க.பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கல்வியியல் பேராசிரியரும் சட்டத்துறை தலைவருமான மா.சின்னத்தம்பி, பாடசாலை அதிபர் த.வாமதேவன், சுன்னாகம் இலங்கை வங்கிக் கிளையின் சிரேஷ்ட முகாமையாளர் எஸ்.பி.அரசகுமார் மற்றும் ஏனைய பாடசாலை அதிபர்கள் மற்றும் கடந்த ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்கள் ஆகியோர் அழைத்து வரப்படுவதை படத்தில் காணலாம்.

# ஈழப்படைப்பாளிகளின் ஆக்கங்களோடு வலம் வரும் ஜீவநதி சஞ்சிகை

ஒரு சிற்றிலக்கிய ஏடானது யாழ்ப்பாணத்தில் 3 ஆவது ஆண்டை நிறைவு செய்து வெள்ளி மலராக வெளியிடுடப்படுவது என்பது ஓர் ஆச்சரியமான விடயம் தான். வாசிப்பில் ஆர்வம் காட்ட வேண்டிய இளஞ்சமூகம் தொலைக்காட்சி என்னும் போதையுள் மூழ்கிக் கிடக்க அவர்களுள் ஒரு பகுதியினருக்காவது வாசிப்பு ஆர்வத்தை ஏற்படுத்திய தன் மூலம்தான் ஜீவநதியின் தொடர் பயணம் சாத்தியமானது என்று கூறலாம்.




இச்சாதானையைப் பிரதம ஆசிரியர் க.பரணீதரன் தலைமையிலான ஜீவநதிக் குழுவினர் நடாத்தி முடித்திருக்கின்றனர். மாதம் இரு முறை வெளிவந்த இச்சஞ்சிகையானது பின்னர் மாதாந்த சஞ்சிகையாக மட்டுமன்றி அளவிலும் அதன் உள்ளடக்கத்திலும் வளர்ச்சியடைந்து வருவதை தொடர்ந்து வாசிப்பவர்கள் உணர்ந்து கொள்ள முடிகிறது.

136 பக்கங்களைக்கொண்ட இச்சஞ்சிகையானது 3 ஆவது ஆண்டு வெள்ளி மலரிலே 19 கவிதைகள், 12 சிறுகதைகள், 11 கட்டுரைகள், நேர்காணல், நூல் விமர்சனம் மற்றும் அனுபவக் குறிப்பு என்பனவும் உள்ளடக்கப் பட்டுள்ளது. இவற்றுள் நூலின் கனதிக்குப் பெரும் காரணமாக இருப்பவை இங்கு இடம் பெற்றுள்ள கட்டுரைகளே எனலாம். இக் கட்டுரைகளை இருவகை களாகப் பிரிக்கலாம்.

இதில் ஒன்று தமிழ்ப் பணியாற்றிய எழுத்தாளர்களின் பங்களிப்பை ஆராய்பவை. இவ்வகையில் லெனின் மதிவானத்தின் கவிஞர் சி.வி.யின் ,''இலக்கிய நோக்கும் காலமும் கருத்தும்'', அருட்திரு தமிழ் நேசன் அடிகளின் "தமிழின் செம்மொழித் தகுதியை நிலை நாட்டிய பேராசிரியர் ஜோர்ஜ் எல்.ஹாட்'', எஸ்.சந்திரபோஸின் "ஈழத்துத் தமிழ் இலக்கியத்தில் – என் கே.ரகுநாதன்" ஆகிய மூன்று கட்டுரைகளும் குறித்த எழுத்தாளர் பற்றிய ஓரளவிற்கேனும் முழுமையான தகவல்களைத் தருகின்றன.

இரண்டாவது கட்டுரையானது இலக்கியங்கள் இலக்கியக்கொள்கைகள் பற்றிய கட்டுரைகளைப் பற்றி தருபவையாகும்.

இவ்வகையில்,"தொல்காப்பியரின் இலக்கியக் கொள்கையும் தற்கால இலக்கியக் கொள்கை அடிப்படையில் அதன் பொருத்தப்பாடும் சில அவதானிப்புக்கள்" என்னும் பேராசிரியர் செ.யோகராஜாவின் கட்டுரை, இன்றைய உலகில் முக்கியத்துவம் பெற்றுள்ள மேலைத்தேய இலக்கியக் கோட்பாடுகளினை ஒத்த கோட்பாடுகள் தொல்காப்பியத்தில் உள்ளமையை எடுத்துக் காட்டுகின்றது. படிமவாதம், குறியீட்டுவாதம், அமைப்பியல் வாதம், தொல்படிமவியல் திறனாய்வு என்பவற்றின் கருத்துக்களை அவர் ஒப்பிட முனைந்துள்ளார்.

சி.ரமேஸின் "ஈழத்து ஆரம்ப கால இஸ்லாமியத் தமிழ்க் கவிதைகள் ஓர் ஆய்வு" என்னும் 10 பக்கங்களில் அமைந்த நீண்ட கட்டுரை ஈழத்தின் ஆரம்பகாலத்தமிழ்க் கவிதைகள் பற்றிய தகவல்களைத் தொகுத்துத் தருகின்றது.

20 ஆம் நூற்றாண்டின் பின் இத்தகைய இலக்கியங்கள் குறைவடைந்தமைக்கான காரணங்கள், ஆய்வு மேற்கொள்ள வேண்டிய முறைமைகள் என்பனவும் சுட்டிக்காட்டப் படுகின்றன.

இவை தவிர பேராசிரியர் சபா. ஜெயராசாவின் "பின் காலனியப் புலப்பாடுகளும் மட்டுப்பாடுகளும்", மு.அநாதரட்சகனின் "கலை, அழகியல், சமூகம்- மார்க்ஸியே நோக்கின் அடிப்படைகள்'',பேருவளை ரபீக் மொஹிடீனின் ''தமிழில் அற இலக்கியங்கள்'' அருள் தந்தை இராசேந்திரம் ஸ்ராலினின் ''மகிழ்ச்சியோடு வாழச் சிறந்த வழிகள்'' என்னும் கட்டுரைகள் வாசகருக்குப் பயனுள்ள பல தகவல்க ளைத் தருகின்றன.

விமர்சகர் கே.எஸ். சிவகுமாரருடனான க.பரணீதரனின் செவ்வி சிவகுமாரனின் கலை இலக்கியக் கோட்பாடுகளையும் விமர்சன நெறி முறைகளையும் வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

அடுத்துச் சிறுகதைகளை எடுத்து நோக்கினால் மூத்த எழுத்தாளர் தெணியான் தொடக்கம் அண்மையில் முதலாவது சிறுகதைத் தொகுதியை வெளியிட்ட சீனா உதயகுமார் வரை

**நூல்விமர்சனம்**

வெவ்வேறு காலப் பகுதிகளில் எழுதத் தொடங்கிய பன்னிரு சிறுகதை எழுத்தாளர்களின் கதைகள் மலரை அலங்கரிக்கின்றன. இவை பல்வேறு கருப்பொருள்களைமையமாகக்கொண்டு எழுதப்பட்டமையால் ஈழத்திற் குறித்த கால கட்டங்களில் நிலவிய, தற்போது நிலவுகின்ற அரசியல், சமூக, பொருளாதாரத நிலைகளை வெளிப்படுத்துவனவாக உள்ளன. மூன்று வருடப் பணியில் இளம் எழுத்தாளர்கள் பலரை இனங்கண்டு வளர்த்து விட்ட பெருமை ஜீவநதிக்கு உரியது. இச்சஞ்சிகையின் வளர்ச்சிக்கு வாசகர்கள் கொடுக்கும் ஆதரவு புதிய எழுத்தாளர் பலரின் உருவாக்கத்திற்கான ஊக்குவிப்பாக அமையும் என்பதில் ஐயமில்லை.

*புலவர்மகன்*

## புதிய மாடிக்கட்டட அடிக்கல் நாட்டுவிழா

கோப்பாய் நாவலர் மகாவித்தியாலய புதிய மாடிக் கட்டத்தின் அடிக்கல் நாட்டுவிழா எதிர் வரும் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஊவா மாகாண சபையின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் இக்கட்டடம் அமைக்கப்படவுள்ளது. இந்நிகழ்விற்கு ஊவா மாகாண முதலமைச்சர், வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துரு சிங்க, வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவன், வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் மற்றும் வலயக்கல்விப்பணிப்பாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (ஸ்ரீ-2)

## வெலிக்கடை சிறைச்சாலையிலுள்ள நாலாயிரம் கைதிகள் இடமாற்றம்

வெலிக்கடைசிறைச்சாலையில் உள்ள நாலாயிரம் கைதிகளை ஏனைய சிறைச்சாலைகளுக்கு மாற்றவுள்ளதாக அமைச்சர் டியூ குணசேகர தெரிவித்துள்ளார். இந் நிலையில் பெண் கைதிகள் வீரவில, பல்லேகல மற்றும் தல்தென ஆகிய சிறைச்சாலைகளுக்கு மாற்றப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.போதைப்பொருள் உள்ளிட்ட பல் வேறுப்பட்ட பிரச்சினைகள் காரணமாகவே இந்த தீர்மானம் மேற்கொள்ளப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை கடந்த வாரம் வெலிக்கடை சிறைச்சாலையில் இடம்பெற்ற மோதலில் 40இற்கு மேற்பட்ட பொலிஸார் உட்பட கைதிகள் சிலர் காயமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

## ஆஸியில் அரசியல் தஞ்சம் நிராகரிக்கப்பட்ட இலங்கையர்களுக்குத் திடீர் யோகம்

அவுஸ்திரேலியாவில் அரசியல் தஞ்சம் நிராகரிக்கப்பட்டிருக்கும் இலங்கையர்களுக்கு திடீர் யோகம் ஒன்று கிடைத்துள்ளது.

இவர்கள் எந்நேரமும் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படலாம் என்று எதிர்பார்க்கப் பட்டிருந்த நிலையில் இவர்களின் தலைவிதியை மாற்றக்கூடிய வரலாற்று முக்கியத்தும் வாய்ந்த தீர்ப்பு ஒன்று நேற்று அவுஸ்திரேலிய நீதிமன்றம் ஒன்றால் வழங்கப்பட்டுள்ளது.

அரசியல் தஞ்சம் நிராகரிக்கப்பட்டமை மற்றும் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படுகின்றமை ஆகியவற்றை ஆட்சேபித்து இலங்கையர் இருவர் அங்கு மேல் நீதிமன்றம் ஒன்றில் வழக்குகள் தாக்கல் செய்திருந்தனர்.

இவ்வழக்குகளை ஏழு பேர் கொண்ட நீதியரசர்கள் குழு விசாரித்தது. அரசியல் தஞ்சம் கோருவோருக்கு விசா வழங்கும் நடைமுறையில் அடிப்படையில் ஏதோ சட்டப் பிழை இருக்கின்றது என்று இக்குழு ஒரு மனதாக தீர்ப்பளித்துள்ளது.

அரசியல் தஞ்சம் கோரி வருவோருக்கு விசா வழங்கும் நடவடிக்கையில் நீதி இல்லாமலுள்ளது என்றும் இத்தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது. அரசியல் தஞ்சம் கோருவோர் நாட்டுக்குள் எவ்விதத்தில் காலெடுத்து வைப்பினும் கூட அவர்கள் சட்டத்தின் முன் சமம் ஆனவர்களாக நடத்தப்பட வேண்டும் என்றும் இத் தீர்ப்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் வழக்காளிகளுக்கான வழக்குச் செலவை அவுஸ்திரேலிய அரசும், குடிவரவு அமைச்சரும் செலுத்த வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. வழக்காளிகளின் பெயர்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

ஆனால் கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் 2 ஆம் திகதி படகு மூலம் கிறிஸ்மஸ் தீவை வந்தடைந்த இலங்கையர்களில் இருவரும் அடங்குகின்றனர். இந்தத் தீர்ப்பு மூலம் ஆஸியில் அரசியல் தஞ்சம் நிராகரிக் கப்பட்டிருக்கும் இலங்கையர்களுக்கு நல்ல காலம் பிறந்துள்ளது. (ஸ்ரீ-2)

# பிரபாகரனின் மெய்பாதுகாவலர்...

*07ஆம் பக்கத் தொடர்ச்சி...*

வளர்க்கிறோம் என்றுதான் கேட்கிறோம். இலட்சுமணனும் அதைத்தான் சொல்லியிருக்கிறார். அதனால் எங்களுக்கு நியாயம் கிடைக்கும் என நினைக்கிறோம்" என்றனர் நம்பிக்கையுடன். கமலினியின் பெற்றோரான கதிர்காமர்-ராஜம்மாள் இருவருக்கும் உதவியாக இருந்துவரும் பத்மாகவி என்பவர், "இசைவிழியை அவர்களிடம் கொடுக்கும்படி இலட்சுமணன் சொன்னதாக அவர்கள் தான் சொல்கிறார்கள். இலட்சுமணனே இதை எங்களிடம் தெரிவிக்கட்டும். நாங்கள் கொடுக்கத் தயார். இல்லையென்றால், 3 பிள்ளைகளுக்கும் வெளிநாட்டு நண்பர்கள் மூலம் நல்ல கல்வியும் எதிர்காலமும் கிடைக்க ஏற்பாடு செய்வோம்" என்றார் நம்மிடம்.

குழந்தை விவகாரத்தில் தலையிட்ட அரசியல் பிரமுகரான ரங்கநாதன் எம்.எல்.ஏ.வைத் தொடர்பு கொண்டபோது, "இந்தப் பிரச்சினையில் விடுதலை சிறுத்தைக் கட்சிக்காரர்கள் தலையிடுகிறார்கள் என்றதும் நான் இதுபற்றி திருமாவிடம் பேசினேன். அவரும் சட்டப்படி நடவடிக்கை எடுக்க ஒத்துழைப்போம்னு சொன்னார்" என்றார்.

திருமாவளவன் எம்.பி.யிடம் இது பற்றிக் கேட்டோம். கமலினியின் தியாகம் எப்படிப்பட்டது என்பது உணர்வுள்ளோர் அனைவருக்கும் தெரியும். அவரது குழந்தையைக் கடத்திவிட்டார்கள் என்ற செய்தி வந்ததால், எங்கள் கட்சிப் பிரமுகர்கள் சிலர் உணர்வுப் பூர்வமாக இந்தப் பிரச்சினையை அணுகியிருக்கிறார்கள். எனக்கு விவரம் தெரியவந்ததும். வன்னி அரசு போன்ற எங்கள் கட்சியின் முக்கிய பிரமுகர்கள் மூலமாக இந்தப் பிரச்சினையைக் கவனிக்கச் சொன்னேன். ஈழக் குழந்தைகளின் நலன்தான் எங்களுக்கு முக்கியம். அதனால் சட்டத்திற்குட்பட்டு. குடும்பத்தினர் பேசி முடிவெடுக்கட்டும் எனத் தீர்மானித்துவிட்டோம் என்றார் தெளிவாக.

மறைவான இடத்திலிருந்து இலட்சுமணன் தெரிவித்துள்ள ஆலோசனையின்படி, குழந்தைகள் விஷயத்தில் முடிவெடுக்க குடும்பத்தினருக்குள் பேச்சு நடைபெற்றுவரும் நிலையில், இந்த விவகாரத்தில் தொடர்புடைய அனைவருமே ஒரே குரலில் சொல்லும் தகவல் ஒன்றுதான்.

"இலட்சுமணன் பேசினார் என்ற தகவல் எங்கள் குழந்தைகள் வாழ்க்கைக்கு மட்டுமல்ல, ஈழத்தின் எதிர்காலம் பற்றிய நம்பிக்கைக்கும் இது. புதிய வெளிச்சத்தைக் காட்டியுள்ளது. பிரபாகரனுக்கு மெய்காப்பாளராக இருந்த இலட்சுமணன் பத்திரமாக இருக்கிறார் என்றால், எங்கள் தலைவர் பிரபாகரனும் பாதுகாப்பாகவே இருக்கிறார் என்பதை புரிந்து கொள்ள முடிகிறது. தலைவர் பற்றி இலங்கை அரசு எவ்வளவு தான் புரளிகளையும் வதந்திகளையும் கிளப்பினாலும் இயக்கத்தின் செயற்பாடுகள் பற்றி எங்களுக்கு நன்றாகத் தெரியும். மெய்க்காப்பாளரைத் தாண்டாமல் தலைவரை ஒரு போதும் நெருங்கவே முடியாது நந்திக்கடல் பகுதியில் தலைவரோடு மெய்க்காப்பாளரும் முடிவெய்தினார் என்றுதான் இலங்கை இராணுவம் சென்னது. ஆனால்,மெய்க்காப்பாளர் பத்திரமாக இருக்கிறார் என்ற உண்மை இப்போது எங்களுக்குத் தெரியவந்துள்ளது. தலைவர் பாதுகாப்பாக இருக்கிறார் என்ற உண்மை நாளை உலகுக்குத் தெரியவரும்" என்கிறார்கள் நம்பிக்கையுடன்.

## கசினோ ஒழுங்குபடுத்தல் சட்டம் நிறைவேற்றப்பட்டது

கசினோ ஒழுங்குபடுத்தல் சட்டம் குறித்த இரண்டாம் வாசிப்பு பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் மேலதிக வாக்குகளால் நிறை வேற்றப்பட்டுள்ளது.

இந்தச் சட்டத்திற்கு ஆதரவாக 114 வாக்குகளும் எதிராக 33 வாக்குகளும் கிடைத் தன.

கசினோ ஒழுங்கு படுத்தல் சட்டம் தொடர்பான இந்த வாக்கெடுப்பில் ஐக்கிய தேசிய கட்சி எதிராக வாக்களித்துள்ளது. அத்துடன் தேசிய சுதந்திர முன்னணி சட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்திருந்தது. (ஸ்ரீ-2)

# மாணவர்களின் சீருடைகள், பாதணிகள் கொள்வனவுக்கு ரூ.40ஆயிரம் நிதியுதவி

## விஜயகலா மகேஸ்வரன் எம்.பி.வழங்கினார்



கிளிநொச்சி வட்டக்கச்சி தெற்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி கற்கும் 55 மாணவர்களுக்கு சீருடைகள் மற்றும் பாதணிகள் என்பவற்றை பெற்றுக்கொடுக்க யாழ்.மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் 40 ஆயிரம் ரூபாவினை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

கடந்த சனிக்கிழமை கிளிநொச்சிக்கு விஜயம் செய்த அவர் வட்டக்கச்சிப் பகுதிக்கும் சென்றார். அங்கு வட்டக்கச்சி தெற்கு கிராம சேவகர் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரி, கிராம மாதர் சங்க பிரதிநிதிகள், விவசாய சங்கத்தின் பிரதிநிதிகள் ஆகியோரை சந்தித்து அப்பகுதி மக்களின் பிரச்சினைகள் குறித்துக் கேட்டறிந்தார்.

இந்தச் சந்திப்பின்போது இப்பகுதியில் மீள்குடியேறிய மக்கள் அனுபவித்துவரும் பிரச்சினைகள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டது.கிளிநொச்சி வட்டக்கச்சி தெற்கு அரசினர் தமிழர் கலவன் பாடசாலையில் கல்வி கற்றும் மாணவர்களுக்கு உரிய சீருடைகளோ, அல்லது பாதணிகளோ இல்லையென அதிபர் தனக்கு அறிவித்துள்ளதாக வட்டக்கச்சி தெற்கு கிராமசேவையாளர் எம்.பி.யிடம் எடுத்துக்கூறினார்.

இதனையடுத்து அந்த மாணவர்களுக்கு சீருடைகள் மற்றும் பாதணிகள்,கொள்வனவு செய்வதற்காக 40ஆயிரம் ரூபா நிதியினை கிராமசேவகரிடம் எம்.பி. வழங்கினார்.

வட்டக்கச்சி தெற்குப் பகுதியில் உள்ள சோதிவிநாய்கர் ஆலயம், நாகதம்பிரான் கோவில், மாணிக்கபிள்ளையார் ஆலயம் ஆகியன யுத்தத்தின்போது சேதமடைந்துள்ளதாகவும்,இவற்றைப் புனரமைக்க நிதி தேவைப் படுவதாகவும் இங்கு தெரிவிக்கப்பட்டது. வட்டக்கச்சி வைத்தியசாலை வாரத்தில் ஒரு நாளே இயங்குவதாகவும் இங்கு அம்புலன்ஸ் வண்டி இல்லாமையினால் இப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் இந்தச் சந்திப்பில் சுட்டிக்காட்டப்பட்டது.

அத்துடன் இங்குள்ள விளையாட்டுக் கழகங்களை ஊக்குவிக்க நிதியுதவி வழங்கப்படவேண்டும் என்று கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இப்பகுதி விவசாயிகளுக்கு விதைப்புக்கான நெல் உரிய வகையில் உரம் வழங்கப்படவில்லையெனவும் ஏனைய இடங்களில் உழவுக்கு காசு கொடுக்கப்பட்ட போதிலும் தமக்கு அந்தக் கொடுப்பனவு வழங்கப்படவில்லையெனவும் இங்கு விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர்.

புனர்வாழ்வு பெற்று விடுவிக்கப்பட்டுள்ள இளைஞர், யுவதிகள் இராணுவ முகாமுக்குச் சென்று ஒவ்வொரு மாதமும் கைச்சாத்திட வேண்டுமென்று பணிக்கப்பட்டுள்ளது. இத்தகைய நடைமுறை குறித்த இளைஞர், யுவதிகள் மத்தியில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. எனவே இந்த விடயம் குறித்தும் தீர்க்கமான முடிவொன்று எடுக்கப்பட வேண்டுமென்று இந்தக் கலந்துரையாடலில் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. (ஸ்ரீ)

# வெளிநாடு செல்லும் எம்.பிக்களுக்கு ஒழுக்க விதிகள் அறிவிக்கப்படவேண்டும்

## அமைச்சர் விமல்வீரவன்ச தெரிவிப்பு

(கொழும்பு)

வெளிநாடு செல்லும் பாராளுமன்ற உறுப் பினர்களுக்கு ஒழுக்க விதியொன்று அறிவிக் கப்படவேண்டுமென வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளுக்கு உத்தியோகபூர்வ விஜயங்களை மேற்கொள்ளும் சகல பாராளுமன்ற உறுப்பினர்களும் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது தொடர்பிலான ஒழுக்க விதிகள் அறிவிக்கப்பட வேண்டுமென அவர் சாபாநயகர் சமால் ராஜபக்ஷவிடம் கோரியுள்ளார்.

நாட்டுக்கு எதிரான வகையில் கருத்துக்கள் வெளியிடப்படுவதனை தடுக்க வேண்டுமெனவும் எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்ரமசிங்க உள்ளிட்ட சில எதிர்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் வெளிநாடுகளில் இலங்கைக்கு எதிராக பிரசாரங்களை செய்து வருவதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதியையோ அல்லது அரசியல் கட்சியையோ பாராளுமன்ற உறுப்பினர்கள் வெளிநாடுகளில் அபகீர்த்திக்கு உள்ளாக்கவில்லை என்றும் நாட்டின் நன்மதிப்பையே அவர்கள் சீர் குலைப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தின் குறைபாடுகளை சுட்டிக் காட்டி அதன்மூலம் ஆட்சி அதிகாரத்தை கைப்பற் றுவதற்கு எவரேனும் முயற்சித்தால் அது வெற்றியடையாது என அவர் மேலும் தெரி வித்துள்ளார்.

இதேவேளை உள்நாட்டு விவகா ரங்கள் தொடர்பில் தற்போதைய ஆளும் கட்சி உறுப் பினர்களே கடந்த காலங்களில் சர்வதேச சமூகத்திற்கு தெரியப்படுத்தியதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப் பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

கடந்த 1989 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இடம்பெற்ற இளைஞர் கிளர்ச்சி குறித்து ஆளும் கட்சியைச் சேர்ந்த சிலர் சர்வதேச நாடுகளிடம் முறைப்பாடு செய்ததாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

# பொருளாதார பிரச்சினைகள் தீர்க்கப்பட்ட பின்னரே அரசியல் தீர்வு முன்வைக்கப்பட வேண்டும்

## சுவாமிநாதன் எம்.பி.வலியுறுத்து

(கொழும்பு)

இடம்பெயர் மக்களின் பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டதன் பின்னரே, அரசியல் தீர்வுத் திட்டம் முன் வைக்கப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.

இடம்பெயர் மக்களின் பொருளாதார நிலைமைகளை மேம்படுத்தப்படும் வரையில் இனப்பிரச்சினைகளை அரசியல் தீர்வுத்திட்டங்களை முன்வைப்பதில் அர்த்தமில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இடம்பெயர் மக்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ள போதிலும் அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லையென அவர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்திப் பணிகள் ஒரு தனிப்பட்ட குழுவோ அல்லது அரசியல் கட்சியோ மேற்கொள்ளக்கூடாது என்றும் அரசாங்கம் இந்தநடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லவேண்டும் எனவும் அவர் கூறினார்.

அத்துடன் வடக்கு மாகாணசபைத் தேர்தல்களை இலக்குவைத்து அரசியல் நோக்கத்துடன், அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படக்கூடாது என்றும் இடம்பெயர் மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்றும் கூறினார். (ஸ்ரீ-2)

# உள்நாட்டு,வெளிநாட்டு அரசசார்பற்ற தொண்டு நிறுவனங்களுக்கு அரசு கிடுக்கிப்பிடி

(கொழும்பு)

இலங்கையில் பணியாற்றும் அனைத்து வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்கள் தொடர்பான கடந்த 1980 ஆம் ஆண்டின் சட்டத்தில் அரசு திருத்தங்களை கொண்டு வந்துள்ளது.

இதன்படி இதுவரை அரசிடம் பதிவுசெய்து கொள்ளாத நிறுவனங்கள் உடனடியாக பாதுகாப்பு அமைச்சகம் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான செயலகத்தில் பதிவு செய்துகொள்ள வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இப்படி பதிவு செய்து கொள்ளும் நிறுவனங்கள் அரசால் எழுத்துபூர்வமாக இந்த உத்தரவு அரச சார்பற்ற நிறுவனங்கள் மீது அரசு கொண்டுள்ள சந்தேகத்தை வெளிப்படுத்துவதாகவே கருத வேண்டியுள்ளது என்று தன்னார்வத் தொண்டு அமைப்புகள் கருத்து வெளியிட்டுள்ளன.

அப்படியான சந்தேகம் ஏன் பாதுகாப்பு அமைச்சகத்துக்கு உருவாகியுள்ளது என்றும் அரச சார்பற்ற அமைப்புக்களின் சார்பில் கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன. இந்தப் புதிய நடைமுறை இலங்கையில் யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களின் மீள்கட்டுமான நடவடிக்கையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும் என இலங்கையின் கிழக்கே செயற்பட்டு வரும் உள்ளூர் அரச சார்பற்ற தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் இணை யத்தின் தலைவரான வர்ணகுலசிங்கம் கமலதாஸ் கருத்து வெளியிட்டுள்ளார்.

இது யுத்தம் நடைபெற்ற காலகட்டத்தில் பாதுகாப்பு பிரிவினரால் அரச சார்பற்ற நிறுவனங்களின் மீது கொண்டுவரப்பட்ட நெருக்கடிகளை மீண்டும் நினைவூட்டுவதாகவே இருக்கின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசின் இந்தச் செயற்பாடு உள்ளூர் மற்றும் வெளிநாட்டு அரச சார்பற்ற தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் சிவில் சமூகத்தினரிடையே ஒரு அச்சத்தையும் தோற்றுவித்துள்ளது எனவும் அரசால் மட்டுமே உதவிகளையும் முன்னேற்றங் களையும் செய்யமுடியாது இலங்கையில் போருக்கு பின்னரான காலகட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய மீள்கட்டுமான நடவடிக்கைகள் மற்றும் மக்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்த தேவையான முன்னெடுப்புகளை செய்ய அரசால் மட்டும் முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நிதி வரும் போது வேகமான அபிவிருத்தி வரும் நிதிகள் மட்டுப்படுத்தப்படும் போது அல்லது பணியாளர்கள் மட்டுப்படுத்தப்படும் போது உதவி தேவைப்படும் பிரதேசம் வளராமல் போய்விடலாம்.

தொண்டு நிறுவனங்கள் இப்படியான பணிகளில் ஈடுபடும் போது அந்தப் பணிகளுக்கான நிதியுதவி பல தரப்பிலிருந்து கூடுதலாகக் கிடைக்கும் எனவும் அது தடைப்படும் போது நிவாரண மற்றும் முன்னேற்றப் பணிகள் தடைப்படும் எனவும் அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

நிவாரண உதவிகளை மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளுக்கான நிதியுதவிகளை சர்வதேசத்திடமிருந்து பெறும் வல்லமை அரசுக்கு இல்லையெனவும் நாடாளுமன்றம் ஒதுக்கும் நிதியிலிருந்தே அரசு உதவி தேவைப்படும் மக்களுக்கு அதை செய்து வருகிறது எனவும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# சர்வதேச ஊடகங்களின் கருத்துக்களுக்கு எதிராக இலங்கை இராஜதந்திரிகள் உரிய பதிலளிப்பதில்லை

## நல்லிணக்க ஆணைக்குழுவில் சிசிர விஜேசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

சர்வதேச ஊடகங்களின் கருத்துக்களுக்கு இலங்கை இராஜதந்திரிகள் உரிய பதிலளிப்பதில்லை என இராணுவ ஊடக ஆலோசகர் சிசிர விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழுவின் முன்னிலையில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

யுத்த நிலைமைகள் குறித்து வெளிநாட்டு ஊடகங்கள் வெளியிடும் கருத்துக்களுக்கு எதிராக இலங்கைத் தூதரகங்கள் சரி யான பதிலளிப்பதில்லை என அவர் தெரி வித்துள்ளார்.

நோர்வேக்கான இலங்கை இராஜதந்திரிகள் நாட்டுக்கு எதிரான கருத்துக்கள் தொடர்பில் போதியளவு விளக்கமின்றி காணப்படுவதாகவும் குறிப்பாக தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக வெளியிடப்பட்டு வரும் செய்திகள் மற்றும் ஆக்கங்கள் தொடர்பில் இராஜதந்திரிகளுக்கு தெரியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒஸ்லோவில் பட்டப் பின் படிப்பை முடித்த விஜேசிங்க நோர்வே மொழிக் கவிதைப் புத்தகமொன்றை மொழி பெயர்த்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இலங்கையில் தமிழர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக நோர்வேயில் வாழும் இலங்கை புலம்பெயர் மக்களின் இளைய தலைமுறைக்கு பாடம் புகட்டப் படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரிவினைவாதக் கருத்துக்களை முடக்குவதற்கு இலங்கைத் தூதரகங்கள் உரியமுறையில் நடவடிக்கை எடுக்கவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நோர்வேயின் முக்கிய நாளிதழ் ஒன்றில் இலங்கை இராணுவம் நாற்பது புலம்பெயர் தமிழர்கள் மீது குண்டுத் தாக்குதல் நடத்தியதாக செய்தி வெளியிடப்பட்டிருந்ததாகவும், இந்தத் தரவுகளை நோர்வே புலிகள் வலையமைப்பு வழங்கியிருந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் தொடர்ச்சியாக சர்வதேச நாடுகளில் அனுதாபம் திரட்டும் முதனைப்புக்களில் தீவிரம் காட்டி வருவதாகவும் யுத்தம் நடைபெற்ற இறுதி ஆறு மாதங்களுக்கு முன்னைய காலப்பகுதிகளில் இலங்கை ஊடகங்கள் நாட்டுக்கு பாதகம் ஏற்படக்கூடிய வகையிலான கருத்துக்களை வெளியிட்டு வந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான நிலைமைகளை வெளிநாட்டு ஊடகங்கள் சாதகமாகப் பயன்படுத்தி இலங்கைக்கு அபகீர்த்தி ஏற்படக்கூடிய செய்திகளை வெளியிட்டு வந்ததாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உள்நாட்டு ஆங்கில நாளிதழ்களின் தரவுகளை உள்ளீடாகக் கொண்டு வெளிநாட்டு ஊடகங்கள் நாட்டின் நன்மதிப்பிற்கு களங்கம் ஏற்படும் வகையிலான செய்திகளை வெளியிட்டதாக அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

எந்தக்காலத்திலும் பலவீனங்கள் உங்கள் மனதை வெல்லாதபடி பார்த்துக் கொள்ளுங்கள்.

– ஓர் அறிஞன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## கலியுகத்திற்குப் பொருந்தாத கீதோபதேச தத்துவம்

நான்கு யுகத்தில் தற்போதையது கலியுகம். கலியுகத்திற்கு முந்தையது துவாரகயுகம். இந்த யுகத்தில்தான் பாரதப்போர் நடைபெற்றது. குருசேஷ்திரத்தில் பாண்டவர்– கௌரவர் யுத்தம் நடந்தது.

குருசேஷ்திரத்தில்– போர்க்களத்தில் கௌரவர் சேனையில் வீஷ்மர், துரோணர் உள்ளிட்ட தம் குருநாதர்களை கண்ணுற்ற அர்ச்சுனன், கண்ணா போர் வேண்டாம் என் உறவுகளைக் கொல்ல முற்படேன் என்று மனம் சோர்ந்து பார்த்தசாரதியின் பாதம் பணிகின்றான்.

பார்த்தசாரதியோ தன் பணி முடிப்பான் போன்று கீதோபதேசம் செய்கின்றான்.

'எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது...' எனக்கூறி அர்ச்சுனா கலங்காதே இது உன் கடமை. கடமையைச் செய்யும்போது இவர் நம்மவர், உறவினர், தெரிந்தவர், பழகியவர் என்றெல்லாம் பார்ப்பது ஆகாது என்று போதனை செய்கின்றார்.

போர்க்களத்தில் கண்ணபரமாத்மா செய்த போதனையை சமகாலத்து மொழிநடையில் கூறுவதாயின் ஆற்றுப்படுத்துதல் (Councilling) என்று கூறலாம்.

ஆற்றுப்படுத்தலில் தெளிந்த அர்ச்சுனன் போர் தொடுக்கின்றான்.

இதைக்கூறும்போது, அட! நீரும் உம்முடைய பழைய புராணமும் என்று நீங்கள் முணுமுணுப்பதும் தெரியாமல் இல்லை.

இருந்தும் இதற்குள் ஓர் தத்துவம் உண்டு.

அதாவது போர் முடிந்து பாண்டவர் ஆட்சி நடக்கும்போது, தர்மசபையில் ஓர் வழக்கு. நிலத்தில் கிடைத்த புதையல் தொடர்பான அந்த வழக்கில் கிடைத்த புதையல் காணியை விற்றவருக்கு சொந்த மென நிலத்தை வேண்டியவரும், காணியை விற்றபோதே புதையலையும் சேர்த்தே விற்றமையால் அது காணியை வேண்டியவருக்கே சொந்தமென்று காணியின் முன்னைய உரிமையாளரும் வாதிடும் வழக்கே அது.

தர்மருக்குமகா மகிழ்ச்சி. அன்பர்களே! நாளைய தினம் வாருங்கள் தீர்ப்புக் கூறலாம் என்றார் தர்மர்.

மறுநாள் தர்மசபை கூடுகின்றது. வழக்குத் தொடுத்த இருவரும் சபைக்கு வந்தனர்.

ஐயா, நானே! காணியை வேண்டியவன் நானே! புதையலை எடுத்தவனும் நானே! ஆக! எனக்கே அது சொந்தம் என்றான் ஒருவன். தர்மருக்கு தலைசுற்றியது. புதையல் மற்றவருக்குரியது என்று நேற்றுக்கூறியவன் இன்று தன்னுடையதென்று கூறுகின்றானே! என்ன நடந்தாயிற்று. தர்மரின் ஏக்கத்திற்கு சகாதேவன் பதில் தருகிறான்.

அண்ணா கலியுகம் பிறந்துவிட்டது. ஆ! அப்படியா! புறப்படுங்கள் என்று தர்மர் கூற பாண்டவர் குழாம் மறுவுலகப் பிரவேசம் செய்கிறது.

ஐயா! உம் தொந்தரவு போதும். இவையெல்லாம் எதற்கு என்று நீங்கள் நினைப்பதும் தெரியாமல் இல்லை. அட! யாழ்.புகையிரத நிலையத்தில் தங்குதல், நாவற்குழியில் குடியமர்த்தல், நிலச் சொந்தக்காரன் அகதியாக இருத்தல், உயர் பாதுகாப்பு வலயம் உண்டா? இல்லையா? என்று பட்டிமன்றம் நடத்துதல் இவையெல்லாம் கலியுகத்தின் வதைகள்தான். அனுபவிப்போம்.

ஆனால் ஒன்று. எது நடந்ததோ! அது நன்றாகவே நடந்தது என்று மட்டும் தயவுசெய்து கூறி விடாதீர்கள். ஏன் எனில் அது துவாரக யுகத்திற்குரியது. இது கலியுகம். துவாரக யுகத்து உபதேசம் கலியுகத்திற்கு பொருந்தவே பொருந்தாது.

# இன்னும் இரண்டாண்டுகளில் அரசாங்கம் ஜனநாயக ரீதியாக தோற்கடிக்கப்படும்

## ஐ.தே.க.தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனநாயக ரீதியான முறையில் தற்போதைய அரசாங்கம் தோற்கடிக்கப்படும் என ஐக்கிய தேசியக்கட்சி அறிவித்துள்ளது.

இன்னும் இரண்டு ஆண்டுகளில் தற்போதைய அரசாங்கம் ஜனநாயக ரீதியில் தோற்கடிக்கப்படும் என ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

மாத்தளை மணிக்கூட்டு கோபுரத்திற்கு அருகாமையில் நடைபெற்ற எதிர்ப்பு போராட்டமொன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவளித்தவர்கள் இன்று அதிருப்தியுடன் காணப்படுவதாக குறிப்பிட்டுள்ளார். சரத் பொன்சேகாவை விடுதலை செய்யுமாறும் பல்கலைகழக மாணவர்களுக்கு எதிரான அடக்குமுறைகளை நிறுத்துமாறும் பொருட்கள் சேவைகளுக்கான விலையை குறைக்குமாறும் கோரி ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது.

நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாகவும் சர்வாதிகார ஆட்சியொன்றை நடத்த அரசாங்கம் முனைப்பு காட்டி வருவதாகவும் மேலும் பாதுகாப்பிற்காக கூடுதலான செலவுகளை செய்தனால் பொருட்கள் சேவைகளுக்கான விலையை குறைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதென அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ–2)

## உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு சைக்கிளோட்டப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலை நீரிழிவுச் சிகிச்சை நிலையத்தினால் உலக நீரிழிவுதினத்தை முன்னிட்டு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நல்லூர் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மக்களுக்கான சைக்கிள் ஓட்டப்போட்டியொன்ற நடத்தப்படவுள்ளது.

இதற்கமைய ஆண்கள் பிரிவிற்கு காலை 8 மணிக்கு கோண்டாவில் சந்தியில் இருந்தும், பெண்கள் பிரிவிற்கு காலை 7 மணிக்கு கொக்குவில் சந்தியிலிருந்தும் இப்போட்டிகள் ஆரம்பமாகவுள்ளது.

எனவே இப்போட்டியில் பங்குபற்ற விருப்புபவர்கள் தங்களது பதிவுகளை யாழ். போதனா வைத்தியசாலை நீரிழிவுச் சிகிச்சை நிலையத்தில் உடனடியாக மேற்கொள்ளுமாறு இவ்வைத்தியசாலையின் நீரிழிவு சிகிச்சை நிலைய டாக்டர் திருமதி பி. செல்வகரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ–2)

## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### நைவேத்தியத்தில் வாழைப்பழம், தேங்காய் படைக்கப்படுவது ஏன்?

கோயிலில் தெய்வத்துக்கு முன்பாக கர்ப்பூரம் ஏற்றப்படுகிறது. அதேபோல் இறைவனுக்காகச் செய்யப்படும் நைவேத்தியத்தில் வாழைப்பழமும், தேங்காயும் வைக்கப்படுகின்றன. காரணம் என்ன?

கர்ப்பூரம் தன்னை அழித்துக்கொள்கிறது. அது எரிந்து முடிந்த பிறகு ஒரு கரித்தூள்கூட மிஞ்சுவதில்லை. வாழையானது மட்டை, தண்டு, இலை, பூ, காய், பழம் அனைத்தையும் தந்து உதவுகிறது. அதேபோல் தென்னை மரமானது கீற்று, இளநீர், தேங்காய் போன்ற அனைத்தையும் தந்து உதவுகிறது. இவற்றில் எந்தப் பாகமும் வீணாவதில்லை. மனிதனும் அப்படி உலகிற்குப் பயன்பட வேண்டும் என்பதையே இது குறிக்கின்றது.

## மரநடுகைத் திட்டம்

(சாவகச்சேரி)

"பசுமை நிறைந்த நாட்டை உருவாக்கு வோம்" என்ற திட்டத்தின் கீழ் தென்மராட்சிப் பிரதேச செயலக வளாகத்தில் எதிர்வரும் 15 ஆம் திகதி திங்கட்கிழமை காலை10 மணிக்கு மரம் நடுகைத் திட்டம் ஆரம்பித்து வைக்கப் படவுள்ளதாக பிரதேச செயலர் திருமதி அஞ்சலிதேவி சாந்தசீலன் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ–29)

## 'பல்கலையன்' நூல் வெளியீட்டு விழா

பல்கலையன் இதழ் வெளியீட்டு விழா இன்று காலை 10 மணிக்கு பல்கலைக்கழக பொருளியற்துறை மண்டபத்தில் இ. அனுராஜ் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பல்கலைக்கழக துணைவேந்தர் நா.சண்முகலிங்கன், சிறப்புவிருந்தினராக கலைப்பீடாதிபதி நா.ஞானகுமாரன் ஆகியோர்கலந்துகொண்டுசிறப்பிக்கவுள்ளனர்.

இதேவேளை நூல்வெளியீட்டு உரையினை ஊடகக் கற்கை நெறி இணைப்பாளர் விமல் சுவாமிநாதன் நிகழ்த்துவதுடன் மதிப்பீட்டுரையினை பேராசிரியர் அ.சண்முகதாஸ் நிகழ்த்துவார். (ச–7)

# வெள்ளி நற்சிந்தனை

148

## பக்தியின் மொழி தமிழ்

வழிபாட்டிடங்களைப் பற்றிய செய்தி கள் தேவாரங்களிலே மிகச் சிறப்பாகத் தொகுக்கப்பட்டுள்ளன. சைவநாயன் மார்கள் தாம் வழிபட்ட திருத்தலங்களை நன்கு காட்சிப் படுத்தியுள்ளனர். குறிப் பாகச் சம்பந்தரும் சுந்தரரும் வயதில் இளையவர்களாக இருந்தமையால் திருக்கோயிற் சூழலைக் கண்டு மனம்கரைப்பதை அவர்களுடைய பாடல்களில் தெளிவாகக் காணமுடிகிறது. இயற்கையழகில் ஈடுபட்ட நிலையால் திருக் கோயிலிலே குடிகொண்ட இறைவன் தோற்றத்தையும் கூர்ந்து நோக்கிய காட்சிகளைப் பாடல்களிலே சொற் சித்திரங்களாக அமைத்துள்ளனர்.

இறைவனைப் பற்றிய தமது உள்ளக்கிடக்கையைச் செந்தமிழ்ப் பாட்டாய்ப் பாடிய சுந்தரரது பாடல் அவருடைய பக்தியைத் தெளிவாய் உணர்த்தி நிற்கிறது. 'இறப்பையும் பிறப்பையும் தவிர்த்து என்னை வகுத்தவன். தன்னுடைய அருளை எனக்குத் தந்தவன். அவனே என் தலைவன்' எனச் சுந்தரர் பாடியுள்ளார். உலக வாழ்க்கையில் நாம் நேரில் காணும் பிறப்பையும் இறப்பையும் பற்றிய ஒரு தெளிவான கருத்தை அவர் இங்கு குறிப்பிட்டுள்ளார். பிறப்பும் இறப்பும் எம் கையில் இல்லை. எல்லாம் அவனுடைய வகுப்பின் படியே நடக்கிறது. இதனால் இறைவன் எல்லோருக்கும் தலைவனாக விளங்குகின்றான்.

இத்தகைய பேராற்றல் படைத்த இறைவனைச் சுந்தரர் கண்டதைச் சொற்களில் காட்சிப்படுத்துகிறார். இறைவன் இறைவியுடன் இணைந்திருக்கும் தோற்றத்தை முதலில் காட்டுகிறார். மலைமாதை மதித்துத் தன் பக்கலில் கொண்டமைந்த மணியென இறைவனைப் புகழ்கிறார். பெண்மையைத் தனக்குச் சமமாக மதிக்கும் ஆண்மையை இத்தோற்றத்தினூடே விளக்கியுள்ளார். 'மாதினை மதித்து அங்கொர் பால் கொண்ட மணி' யென இறைவனைப் போற்றுகிறார். இதேவேளை கங்கையைத் தலையில் வைத்திருக்கும் நிலையையும் காட்டுகிறார். 'வருபுனல் சடையிடை வைத்த எம்மான்' என்ற சுந்தரர் கூற்று மாதினை மதிக்கும் மாண்பை மேலும் சுட்டி நிற்கிறது. இரு பெண்ணோடு வாழ ஆசைப்பட்ட சுந்தரது மனதில் இறைவன் தோற்றத்தில் கங்கை பாய்ந்து வரும் புனலாகவே தோற்றுகிறது.

குற்றமற்ற இறைவன் குணத்தைப் பற்றி அடுத்துக் கூற விழையும் சுந்தரர் 'என்மனத்துக்கு ஒரு இரும்புண்ட நீர்' என இறைவன் அருளை விளக்குகிறார். பழுக்கக் காய்ச்சிய இரும்புத் துண்டத்தின் மீது ஊற்றப்படும் குளிர்மையான நீர் உடனடியாக நெருப்பின் வெம்மையுடன் கலந்து விடுவது போலப் பக்திக் கனல் கொண்ட தனது மனமும் இறைவனருளை உணர்ந்து கொண்ட தைப் புலப்படுத்தியுள்ளார். காதிலே வெண்குழை அணிந்த இறைவனுடைய தோற்றத்தைத் தனது மனத்தில் இருத் திக் கொள்கிறார்.

சம்பந்தர் இறைவனுடையதோடு உடைய செவியைப் பாடலிலே சிறப்பாகக் குறிப்பிட்டது போல காதில் வெண் குழையனாகச் சுந்தரர் இறைவனைக் காட்டுகிறார். கடல் சூழ்ந்த கழுமலர் வளநகரில் கோயில் கொண்ட இறைவ

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

னுடைய அன்பை நினைந்து வியந்து பாடுகிறார்.

சாதலும் பிறத்தலும் தவிர்த் தென்னை
வகுத்துத்
தன்னருள் தந்த என்தலைவன்
மலையின்
மாதினை மதித்து அங்கொர் பால்
கொண்ட மணியை
வருபுனல் சடையிடை வைத்த
எம்மானை
ஏதிலென் மனத்துக் கொரு இரும்புண்ட
நீரை
எண்வகை யொருவனை எங்கள்
பிரானை
காதில் வெண்குழையனைக் கடல்
கொளமிகுந்த
கழுமலவளநகர்க் கண்டு
கொண்டேனே.

# இந்தியாவுக்கு ஒபாமா ஆதரவு; பாகிஸ்தான் கடும் அதிருப்தி

ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியா நிரந்தர அந்தஸ்து பெற அமெரிக்கா ஆதரவு அளித்துள்ளமைக்கு பாகிஸ்தான் கடும் அதிருப்தி தெரிவித்துள்ளது.

இஸ்லாமாபாத்தில் நேற்று முன்தினம் அந்நாட்டு பிரதமர் யூசுப் ரஸா கிலானி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அதிருப்தி தெரிவிக்கப்பட்டது.

ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியா நிரந்தர அந்தஸ்து பெற தங்களது முழு ஆதரவு உண்டு என்று அமெரிக்க அதிபர் ஒபாமா கூறியுள்ளார். அவர் கூறியதால், மட்டுமே இந்தியாவுக்கு நிரந்தர அந்தஸ்து கிடைத்து விடாது என்று பாகிஸ்தான் பாதுகாப்புத்துறை அமைச்சர் செத்ரி அஹமத் முக்தார் கூறினார்.

ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் நிரந்தர அந்தஸ்தை எட்டிப் பிடிப்பதென்பது இந்தியாவுக்கு எளிதான விடயமல்ல என்றும் அவர் குறிப்பிட்டார். இது கவுன்சிலில் நிரந்தர அந்தஸ்தை பெற பல்வேறு நாடுகள் போட்டிகள் போடுகின்றன. இந்தியா நிரந்தர அந்தஸ்தை பெற இப்போது உலகில் நிலவும் சூழல் இடம் வழங்காது. ஒபாமா நிர்வாகம் கூறியதால் மட்டுமே இந்தியாவுக்கு ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் நிரந்தர அந்தஸ்து கிடைத்து விடாது என்று அந்நாட்டின் கல்வித் துறை அமைச்சர் சர்தார் ஆசிப் அகமது அலி கூறினார்.

பயங்கரவாதிகளால் இந்தியாவைவிட பாகிஸ்தான் அதிகமாகப் பாதிக்கப்படுகிறது. பயங்கரவாதிகளை ஒடுக்க பாகிஸ்தானும் இந்தியாவும் கைகோர்த்து செயற்பட வேண்டும் என்று அமைச்சர் செத்ரி அஹமத் தெரிவித்துள்ளார்.

மும்பை தாக்குதலுக்கு பின்னர் பாகிஸ்தானும் பயங்கரவாதிகளால் கடுமையாக தாக்கப்பட்டுள்ளது. இதை ஒபாமாவே கூறியுள்ளார் என்றும் அவர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# புஷ்ஷின் சுயசரிதைப் புத்தகம் 1.5 இலட்சம் பிரதிகள் விற்பனை

அமெரிக்க முன்னாள் அதிபர் ஜோர்ஜ் புஷ் டிசிசன் பாயின்ட்ஸ் என்ற பெயரில் சுயசரிதை புத்தகம் எழுதியுள்ளார்.

கிரவுன் பப்ளிக் நிறுவனம் இந்தப் புத்தகத்தை அச்சிட்டு வெளியிட்டு உள்ளது. ஜோர்ஜ்புஷ் அதிபராக இருந்த காலங்களில் நடந்த சம்பவங்கள், இரகசியங்கள் போன்றவற்றை எழுதியுள்ளார். ஈராக் போர் உள்ளிட்ட முக்கிய பிரச்சினைகளில் அவர் எடுத்த முடிவுகள் பற்றியும் விளக்கி இருக்கிறார்.

கடந்த 9 ஆம் திகதி இந்த புத்தகம் விற்பனைக்கு வந்தது. இதுவரை ஒரு இலட்சத்து 70 ஆயிரம் பிரதிகள் விற்றுள்ளன. இணையத்தளம் மூலம் இ. பப்ளிசிங் முறையிலும் புத்தகம் விற்கப்படுகிறது. அதில் 50 ஆயிரம் புத்தகங்கள் விற்றுள்ளன.வெளிவந்த உடனே அதிகமாக விற்கும் புத்தகங்கள் வரிசையில் புஷ்ஷின் புத்தகமும் இடம்பெற்றுள்ளது. முதல் பதிவில் மட்டுமே 15 இலட்சம் புத்தகங்களை வெளியிட திட்டமிட்டிருந்தனர். புத்தகம் வெளிவந்த இரண்டு நாட்களிலே 1 இலட்சத்து 70 ஆயிரம் புத்தகங்கள் விற்று இருப்பதால் மிக விரைவிலேயே முதல் பதிவு புத்தகங்கள் அனைத்தும் விற்றுத் தீர்ந்து விடும் என்று எதிர்பார்க்கின்றனர். (ஸ்ரீ-2)

# மியன்மார் எதிர்க்கட்சித் தலைவி ஆங்சான் சூகி நாளை விடுதலை

(யாங்கூன்)

மியன்மார் எதிர்க்கட்சித் தலைவர் ஆங் சான் சூகி நாளை விடுதலை செய்யப்படுவார் என அந்நாட்டு இராணுவ அரசு தெரிவித்துள்ளது.

மியன்மார் நாட்டில் கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக இராணுவ ஆட்சி நடந்து வருகிறது. ஜனநாயகத்துக்காகப் போராடிய ஜனநாயக தேசிய லீக் கட்சி தலைவர் ஆங் சான் சூகி உள்ளிட்ட அரசியல்தலைவர்கள் வீட்டுக்காவலிலும் சிறையிலும் அடைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் அங்கு கடந்த 7ஆம் திகதி பொதுத்தேர்தல் நடந்தது. இதில் இராணுவ ஆட்சிக்கு எதிராக போராடி வரும் ஆங் சான் சூகி போட்டியிட அனுமதிக்கப்படவில்லை. பொதுத் தேர்தலில் இராணுவ அரசுக்கு ஆதரவான ஐக்கிய ஒற்றுமை மேம்பாட்டுக்கட்சி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஆங் சான் சூகி நாளை விடுதலை செய்யப்படுவார் என அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது. மியன்மாரில் ஜனநாயகத்துக்காக கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக போராடி வரும் நோபல் பரிசு பெற்ற பெண் அரசியல் தலைவர் ஆங் சான் சூகி விடுவிக்கப்பட்டபின் நாட்டின் அரசியல் நிலை மாறுமா என்பது இப்போது கணிக்க முடியாது. (ஸ்ரீ)




இங்கிலாந்தில் பல்கலைக்கழக கல்வி கட்டணம் உயர்த்தப்பட்டதை கண்டித்து லண்டன் பாராளுமன்றத்தின் முன்பு மாணவ, மாணவிகள் கண்டன பதாகைகளை ஏந்தி ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

# சிறுநீரை விலை கொடுத்து வாங்கும் தென்னாபிரிக்கா

(டர்பன்)

விவசாயத்திற்காக பயன்படுத்தப்படும் உரத்தினை மனிதனின் சிறுநீர் மூலம் தயாரிக்கும் புதிய முயற்சியினை தென்னாபிரிக்காவின் டர்பன் நகராட்சி மேற்கொண்டுள்ளது.

இதற்காக ஒவ்வொரு வீட்டிலும் உள்ளவர்களின் சிறுநீரை விலை கொடுத்து வாங்கவும் முடிவு செய்துள்ளது.

மனித கழிவுகள் கூட விவசாயத்திற்கு இயற்கை உரங்களாக பயன்படுவதுண்டு. விவசாய உரத்தில் நைட்ரேட், பொஸ்பரஸ் மற்றும் பொட்டாசியம் போன்றவை உள்ளன.

தென்னாபிரிக்காவின் துறைமுக நகரமான டர்பனில் வசிக்கும் குடியிருப்புவாசிகள் உலர்ந்த கழிவறைகளை பயன்படுத்துவதை ஊக்குவிக்கவும் திரவ திடக்கழிவுகளை விலை கொடுத்து வாங்கவும் முயற்சி மேற்கொண்டு வருகிறது.

இதன் மூலம் சுகாதாரமும் சுற்றுச்சூழலும் பாதுகாக்கப்படும் எனவும் நம்பப்படுகிறது. முன்னதாக இத்திட்டம் குறித்து ஆய்வினை தீவிரமாக கவனித்த சுவிட்சர்லாந்தில் உள்ள ஆராய்ச்சி மையத்தின் ஈவோக் அன்ட் பில் மிலின்டா கேட்ஸ் பவுண்டேசன் இத்திட்டத்திற்கு ஆதரவு வழங்கியது.

இதன்படி தென்னாபிரிக்காவில் டர்பன் நகரில் 500 குடியிருப்புகளில் 90 ஆயிரம் உள்ள கழிவறைகளில் சுமார் 20 லீற்றர் கொள்ளளவு கொண்ட கன்டெய்னர் வைக்கப்பட்டது.

இதில் சேமிக்கப்படும் சிறுநீர் வாரத்திற்கு ஒரு முறை நகராட்சி ஊழியர்கள் இந்த கண்டெய்னர்களில் சிறுநீரை எடுத்துச் செல்வர். இதற்காக ஒரு குடும்பத்திற்கு நான்கு டொலர்கள் அல்லது மூன்று யூரோக்களை பணமாக வழங்குகிறது.

இதுகுறித்து டர்பன் நகர குடிநீர் சுகாதாரத்துறை தலைவர் நீல்மெக்லியோட் கூறுகையில் , இதன் முக்கியத்துவம் குறித்து மக்களுக்கு சரிவர தெரியவில்லை.

வருமானம் வரும் ஆதாரமாக கழிவறைகள் விளங்கினால் இனி அனைவரும் கழிவறைகளை பயன்படுத்த விரும்புவர் என்றார்.

தென்னாபிரிக்காவைச் சேர்ந்த குடிநீர், சுகாதாரத்துறை ஆலோசகர் பியர்ரி யூவெஸ் ஒகர் கூறுகையில்,

நூறு ஆண்டுகளுக்கு முன்பே இத்திட்டம் ஏமன் நாட்டில் பயன்படுத்தப்பட்டுள்ளது என்றார். (ஸ்ரீ-2)



உலகின் இரண்டாவது மிகப்பெரிய ஆமை என பெயர் பெற்ற (எடை 215 கி.கி) நிலத்தில் வாழும் ஆமை அமெரிக்காவின் வெர்ஜினிய தேசிய விலங்கியல் பூங்காவில் உள்ளது. நீண்ட நாட்களுக்கு பிறகு இவ் ஆமை பார்வையாளர்களுக்காக வெளியே வந்தது.


# அரசாங்க அறிவித்தல்

**நிவாரண விநியோகத்திற்குரிய பொருட்களை கொள்வனவு செய்வதற்கான கூறுவிலை கோரல்**

யாழ். மாவட்டத்தில் இடம்பெயர்ந்த மக்களுக்கு மூன்று மாதங்களுக்குரிய நிவாரண விநியோகத்தை மேற்கொள்வதற்காக பின்வரும் பொருட்களை கொள்வனவு செய்வதற்கான கூறுவிலைகள் யாழ். மாவட்ட அரசாங்க அதிபரினால் கோரப்படுகின்றன.

1.சிவப்பு நாட்டரிசி
2.கோதுமை மா
3. சீனி
4.பருப்பு

இப் பொருட்கள் கொள்வனவு செய்வதற்கான முத்திரையிடப்பட்ட(Sealed) கூறுவிலைகள் யாழ். மாவட்ட அரசாங்க அதிபரினால் கோரப்படுகின்றது. இப் பொருட்களை விற்பனை செய்ய விரும்புபவர்கள் மீளளிப்பு அற்ற வைப்பு பணமாக ரூபா 5,000.00 உம் , மீளளிக்கக் கூடியதான வைப்பாக ரூபா 50,000.00 உம் செலுத்தி விண்ணப்பப் படிவத்தை புனர்வாழ்வு கிளையில் பெற்று தபால் உறையின் மேல் மூலையில் "**நிவாரண விநியோகத்திற்குரிய பொருட்களுக்கான கூறுவிலை**" என குறிப்பிட்டு 26.11.2010 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு புனர்வாழ்வு கிளையில் உள்ள கேள்விப் பெட்டியில் நேரடியாக அல்லது பதிவுத் தபால் மூலம் சீல் (Seal) இடப்பட்ட கடித உறையில் தங்களது கூறுவிலைகளை சமர்ப்பிக்குமாறு கோரப்படுகின்றார்கள். கூறுவிலைகள் சமர்ப்பிக்கப்படும் போது அப்பொருட்களுக்கான மாதிரி சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பொருட்கள் கொள்வனவு செய்தல் தொடர்பாக பொருட்களின் தரம், கேள்வி நிபந்தனைகள் மற்றும் விண்ணப்பப் படிவங்களை மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகத்துடன் தொடர்பு கொண்டு 15.11.2010 ஆம் திகதி முதல் பெற்றுக்கொள்ள முடியும்.

கூறுவிலைகள் 26.11.2010 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு திறக்கப்படும். இதில் கூறுவிலை சமர்ப்பித்தவர் அல்லது அவரின் அனுமதி பெற்ற பிரதிநிதி சமுகமளித்திருக்க முடியும். பொருட்களை விநியோகிப்பவர்கள் கோரப்படும் தொகையினை கொள்வனவு கட்டளை வழங்கப்பட்ட தினத்தில் இருந்து ஒருவாரத்தினுள் நாவற்குழி களஞ்சியத்தில் இறக்கி ஒப்படைத்தல் வேண்டும்.

**கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.**

**திருமதி. இமெல்டா சுகுமார்**
**அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலர்,**
**யாழ். மாவட்டம்.**

சி/1617



ஜனாதிபதி நல்லிணக்க ஆணைக்குழு முன் காணாமல் போனவரின் தந்தையொருவர் சாட்சியமளிப்பதையும் அதனை விசாரணைக்குழு உன்னிப்பாக அவதானிப்பதையும் சாட்சியளிக்கச் சென்ற மக்களின் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்

# வடக்கு- கிழக்கு பிரிப்பிலேயே தீர்வுத்திட்டம் முன்னெடுக்கப்படும்

## அமைச்சர் ஹெகலிய தெரிவிப்பு

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டங்கள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் என்ற பிரிப்பின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படுமென ஊடகத்துறை அமைச்சர் ஹெகலிய றம்புக்வெல தெரிவித்துள்ளார்.

நேற்று நடந்த ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு மாகாணங்கள் பிரிக்கப்பட வேண்டும் என உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

எனினும் இதனைப்புரிந்து கொள்ளாத தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் வடக்கு கிழக்கு மாகாணங்களை இணைக்கவேண்டுமென கேட்கின்றனர்.

இது ஒருபோதும் சாத்தியப்படமாட்டாது. இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் போது வடக்கு கிழக்கு என்ற பிரிப்பின் அடிப்படையிலேயே தீர்வுத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் மேலும் கூறினார். (ந-5)

# நாவற்குழியில் குடியேறச் சென்ற தமிழ் மக்கள் திருப்பப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

நாவற்குழிப்பகுதியில் குடியேறச் சென்ற தமிழ்க்குடும்பங்கள் நேற்று பொலிஸாரால் திருப்பி அனுப்பப்பட்டதாக பெண் ஒருவர் தெரிவித்தார். 1995 வரையான காலப்பகுதியில் இங்கு குடியிருந்த நூற்றுக்கும் அதிகமான மக்கள் அருகில் இருந்த உறவினர்களின் வீடுகளிலேயே வாழ்ந்துவந்தனர். குறித்த அரச காணி ஏற்கனவே அவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது.

இப்குதியில் ஏற்கனவே அவர்கள் குடியமர முற்பட்ட போதும் அப்பகுதிக் கிராம அலுவலர் அதற்கான அனுமதியை மறுத்துவிட்டதாகப் பாதிக்கப்பட்ட மக்கள் குற்றஞ்சாட்டினர்.

இந்நிலையில் சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டமை தொடர்பில் அச்சம் கொண்டிருந்த அவர்கள் தமது காணிகள் பறிபோவதாக எண்ணி நேற்றுக்காலை அங்கு குடியேறுவதற்கு தயாரான நிலையில் தற்காலிக கொட்டில்களை அமைக்கும் பொருட்டு அங்கு சென்றுள்ளனர். இந்நிலையில் பொலிஸார் அவர்களை விரட்டியுள்ளனர். அவர்களது முயற்சி தோல்வியடைந்த நிலையில் அப்பகுதியிலுள்ள படை முகாமின் முன்னால் குவிந்து நின்றனர். படையினர் உரிய நடவடிக்கை எடுப்பதாக வழங்கிய உறுதிமொழிகளை அடுத்து அவர்கள் ஏற்கனவே அடைக்கலம்புகுந்திருந்த உறவினர் வீடுகளுக்குத் திரும்பினர். (எ-1)

# வெள்ளைக்கொடி வழக்கில் சவேந்திர சில்வா சாட்சி

(கொழும்பு)

வெள்ளைக்கொடி வழக்கில் மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா சாட்சியமளிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் 15 ஆம் திகதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா நீதிமன்றில் சாட்சியமளிக்கவுள்ளார்.

வழக்கின் பிரதான சாட்சியாளராக பெர்ட்ரிக்கா ஜோன்ஸிடம் நடத்தப்பட்ட விசாரணைகள் பூர்த்தியாகியுள்ளதாகவும் சவேந்திர சில்வாவிடம் விசாரணை நடத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வழக்கின் மூன்றாவது சாட்சியாளரான சவேந்திர சில்வாவிடம் விசாரணை நடத்த வேண்டுமென பிரதி சொலிசிட்டர் மாயகம் வசந்த நவரட்ண பண்டார நீதிமன்றில் கோரிக்கை விடுத்துள்ளார்.

சவேந்திர சில்வா யுத்தம் இடம்பெற்ற காலத்தில் 58 ஆம் படையணியின் கட்டளைத் தளபதியாக செயற்பட்டுவந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது ஐக்கியநாடுகள் அமைப்பிற்கான இலங்கைப் பிரதிநிதியாக செயற்பட்டு வருகின்றார். ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சரத் பொன்சேகாவிற்கு எதிராக இலங்கை அரசாங்கம் வெள்ளைக்கொடி வழக்கினைத் தாக்கல் செய்துள்ளது. (ச-5)

# சரணடைந்த எனது கணவரை இராணுவம் அழைத்துச் சென்றது

## புதுவையின் மனைவி சாட்சியம்



(யாழ்ப்பாணம்)

சரணடைந்த விடுதலைப்புலிகளுக்கு புனர்வாழ்வு அளிக்கப்படும் என இராணுவம் அறிவித்தநிலையில் எனது கணவரை நானே இராணுவத்தினரிடம் ஒப்படைத்தேன் என தமிழீழ விடுதலைப்புலிகளின் கலைப்பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரையின் மனைவி தெரிவித்தார்.

நேற்று அரியாலை சரஸ்வதி கலாசார மண்டபத்தில் நடைபெற்ற நல்லிணக்க விசாரணைகள் ஆணைக்குழு முன் சாட்சியமளிக்கும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது,

நாங்கள் கடந்தவருடம் மே மாதம் 17 ஆம் திகதி வட்டுவாகலில் இருந்து மறுநாள் இராணுவக் கட்டுப்பாட்டுப்பகுதிக்கு சென்றோம்.

அங்கு விடுதலைப்புலிகளின் உறுப்பினர்களை சரணடையுமாறும் அவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில் எனது கணவரை சரணடையுமாறு கோரினேன். அவர் இணங்கவே எனது முன்னிலையில் அவர் இராணுவத்திடம் சரணடைந்தார்.

சரணடைந்த அனைவரும் பஸ்களில் ஏற்றப்பட்டு கொண்டுசெல்லப்பட்டனர். நாங்கள் நலன்புரி முகாமிற்கு கொண்டுசெல்லப்பட்டோம். அங்கு இராணுவ உயரதிகாரியிடம் எனது கணவரை அழைத்துச்சென்ற சம்பவம் தொடர்பில் கூறினேன்.

அவர் விண்ணப்பப்படிவம் ஒன்றைத் தந்து அதனை பூர்த்திசெய்து தருமாறு கோரினார். அதன்படியே செய்தோம். ஆனால் எந்தத் தகவலும் இல்லை.

அதன் பின் ஜனாதிபதி மற்றும் பசில்ராஜபக்ஷ ஆகியோருக்கு கடிதங்களும் அனுப்பினேன். ஆனால் அதற்குப் பதில் எதுவும் கிடைக்கவில்லை. எனவே எனது கணவரை மீட்டுத்தாருங்கள் என்றார். (ச-5)

# போராளியான எனது கணவரின் விபரங்களைப் பெற்றுத்தாருங்கள்

## மனைவி சாட்சியம்

(நீர்வேலி)

வட்டுவாகலில் இராணுவத்தில் சரணடைந்த முன்னாள் புலிகளின் போராளியான எனது கணவர் தொடர்பான விபரங்கள் எதுவும் இல்லையென மனைவி மகிந்தராஜ் துளசிகா சாட்சியமளித்தார்.

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணை நேற்றிரவு கோப்பாய் பிரதேசசெயலக பிரிவைச் சேர்ந்த மக்களுக்காக நீர்வேலி திருமுருகன் கல்யாண மண்டபத்தில் நடைபெற்றது.

இவ் ஆணைக்குழு முன் சாட்சியமளிக்கையிலேயே திருமதி மகிந்தராஜ் துளசிகா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன் போது அவர் தனது சாட்சியத்தில்,

விடுதலைப்புலிகள் அமைப்பில் மருத்துவப்பிரிவிலிருந்த ரேகா என அழைக்கப்பட்ட ரங்கசாமி மகிந்தராஜ் என்ற எனது கணவர் மற்றும் நான் எனது பிள்ளைகள் இருவரும் 2009 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆம் திகதி வட்டுகாவில் இராணுவத்தினரிடம் சரணடைந்தோம்.

எனினும் என்னையும் பிள்ளைகள் இருவரையும் ஓமந்தையில் விடுவித்து விட்டு கணவரை இராணுவத்தினர் அழைத்துச சென்றனர்.

அத்துடன் மருத்துவப்பிரிவில் பணியாற்றிய போராளிகள் அனைவரையும் சரணடையுமாறு இராணுவத்தினர் ஓமந்தையில் ஒலிபெருக்கி மூலம் அறிவித்தனர்.

பின்னர் நானும் பிள்ளைகள் இருவரும் வவுனியா வலயம்-4 முகாமில் தங்கியிருந்த போது இராணுவத்தினர் இரண்டுதடவை கள் வந்து விசாரணை செய்தனர்.

எனினும் இராணுவத்தினரிடம் சரணடைந்த எனது கணவர் தொடர்பில் எதுவித தகவல்களும் எனக்குக் கிடைக்கவில்லை.

எனவே எனது கணவரை மீட்டுத்தாருங்கள் என கேட்டுக்கொள்கின்றேன்.

இவ்வாறு தனது சாட்சியத்தில் திருமதி மகிந்தராஜ் துளசிகா தெரிவித்தார். (ச-5)

# ஜனாதிபதியின் பதவிப்பிரமாண நிகழ்வுகளில் சீனப் பிரதிநிதி

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பதவிப்பிரமாண நிகழ்வுகளில் சீன ஜனாதிபதியின் விஷேட பிரதிநிதியொருவர் கலந்து கொள்ள உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சீன ஜனாதிபதியின் விசேட பிரதிநிதி சாங்க்வோய் எதிர்வரும் வாரம் நடைபெறவுள்ள பதவிப் பிரமாண நிகழ்வுகளில் கலந்துகொள்வார் எனக் குறிப்பிடப்படுகிறது.

சீன தேசிய மக்கள் காங்கிரஸ் கட்சியின் நிலையிற் குழுவின் பிரதித் தலைவராக சாங் கடமையாற்றி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. எதிர்வரும் நவம்பர் மாதம் 19 ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இரண்டாம் தவணைக்காக பதவிப் பிரமாணம் செய்ய உள்ளார்.

ஹம்பாந்தோட்டை துறைமுக திறப்பு விழாவிலும் சாங் பங்கேற்பார் என தெரிவிக்கப்படுகிறது. (ச-5)

# காணாமல் போனோரை மீட்க தொலைபேசி மூலம் கப்பம்

(கிளிநொச்சி)

காணாமல் போனோரை மீட்டுத் தருவதாகக் கோரி தொலைபேசி மூலம் கப்பம் கோரும் சம்பவங்கள் கிளிநொச்சியில் இடம்பெற்று வருவதாக நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனிடம் முறையிடப்பட்டுள்ளது.

மேஜர் சீலன் என தம்மை தொலைபேசி மூலம் அறிமுகம் செய்யும் நபர் ஒருவர் காணாமல் போனோரை மீட்பதற்கு ஒரு இலட்சம் ரூபாய் தருமாறு அதனை கிளிநொச்சி பாடசாலை ஒன்றின் பிரதி அதிபர் ஒருவரிடம் கொடுக்குமாறும் கூறிவருவதாக தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு இனந்தெரியாத நபர்களின் தொலைபேசி உரையாடல்களை நம்பி ஏமாற வேண்டாம் என சிறிதரன் எம்.பி. கேட்டுக் கொண்டார். (ச)

# விசாரணைகள் தாமதம் மக்கள் பெரும் ஏமாற்றம்

(கொழும்பு)

ஜனாதிபதியில் நியமிக்கப்பட்ட ஆணைக் குழுவின் விசாரணைகள் தாமதமடைந்ததால் பொதுமக்கள் பலர் சாட்சியமளிக்காமல் திரும்பிச் சென்றனர். ஜனாதிபதி ஆணைக் குழுவின் விசாரணை நேற்றுக் காலை 8.30 மணிக்கு குருநகர் கலா சார மண்டபத்தில் ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் விசாரணைக்குழுவின் யாழ்.வருகை தாமதமானதால் விசனமடைந்த பொதுமக்கள் சாட்சியமளிக்காது திரும்பிச் சென்றனர்.

கொழும்பில் பெய்யும் கடும் மழைகாரணமாகவே விசாரணைக்குழு வருவதில் தாமதம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. 8.30 மணிக்கு ஆரம்பிக்க வேண்டிய கூட்டம் இடம் பெறாமை குறித்து எந்தவித அறிவித்தல்களும் வழங்கப்படவில்லை. இதனால் அங்கு காத்திருந்த மக்கள் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

இதேவேளை அரியாலை சரஸ்வதி சனசமூகநிலையத்தின் கலாசாரமண்டபத்தில் 1.30 மணிக்கு ஆரம்பிக்க வேண்டிய விசாரணைகள் மாலை 4 மணிக்கும் நீர்வேலியில் 4.30 மணிக்கு ஆரம்பிக்க வேண்டிய விசாரணைகள் 8 மணிக்கும் இடம்பெற்றது. இவ்விசாரணைகளின் போது பெருமளவான மக்கள் சாட்சியமளித்தனர். (ச-5)

# யாழில் இடம்பெற்ற கைதுகளுந...

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற கைதுச் சம்பவங்களுக்கும், காணாமல் போன சம்பவங்களுக்கும் இராணுவத்தினருக்கும் முழுத் தொடர்பு இருப்பதாக சாட்சியமளிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள நல்லிணக்க விசாரணை ஆணைக்குழு முன்னிலையில் நேற்று சாட்சியமளித்தவர்கள் தெரிவித்தனர்.

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய கலாசார மண்டபத்தில் நடைபெற்ற கலாசார மண்டபத்தில் நடைபெற்ற விசாரணையின் போதே இவ்வாறு சாட்சியமளிக்கப்பட்டுள்ளது.

இதில் கோண்டாவிலைச் சேர்ந்த சத்தியா தேவி என்பவர் சாட்சியமளிக்கையில், எனது மகன், அவரது மனைவி 3 பிள்ளைகளுடன் நான் வசித்துவந்தேன்.

2007 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 7 ஆம் திகதி இரவு 8.45 மணியளவில் எமது வீட்டுக்கு வந்த இராணுவத்தினர் விசாரணைக்கென எனது மகனை அழைத்துச் சென்றனர்.

ஆனால் அவர் இன்று வரை விடுதலை செய்யப்படவில்லை. எனது மகனை இராணுவத்தினர் அழைத்துச் சென்ற மறுநாளே மனித உரிமைகள் ஆணைக்குழு, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, இராணுவத்தரப்பு ஆகிய வற்றிடம் முறையிட்டேன் ஆனால் எந்தவிதபதிலும் எனக்கு தெரிவிக்கவில்லை.

ஆனால் எனது மகன் ஊரெழு இராணுவமுகாமில் இருப்பதாக அங்கு கண்டவர்கள் என்னிடம் தெரிவித்தனர். எனது மகன் இன்னமும் உயிருடனே இருக்கிறார்.

எனக்கு நம்பிக்கை இருக்கிறது எனவே எனது மகனை கண்டு பிடித்துத் தாருங்கள் என அவர் கோரிக்கை விடுத்தார். இதேவேளை. திருநெல்வேலியைச் சேர்ந்த நா.சத்தியவாகேஸ்வரன் என்பவர் சாட்சியமளிக்கையில் கூறியதாவது,

எனது மகன் ரஜீவன். இவர் தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் பணியாற்றிவந்தார். இவருக்கு 2006ஆம் ஆண்டு ஆகஸ்ட் 27ஆம் திகதி திருமணம் நடந்தது. இவர் திருமணம் செய்து 15 ஆவது நாளே இராணுவத்தால் கைது செய்யப்பட்டார்.

சம்பவநாளன்று இரவு வீடுபுகுந்த இராணுவத்தினர் எனது மகனை இழுத்துச் சென்றனர். நாங்கள் கெஞ்சினாம், மன்றாடினோம். எனது பிள்ளையை விடுதலை செய்யுமாறு கோரினோம் ஆனால் அவர்கள் செவிசாய்க்கவில்லை.

மகனை இழுத்துச் சென்றனா. அதனைத் தடுத்த எனது மனைவியின் தலையில் தாக்கினர். மறுநாள் எமது மகனை இராணுவம் அழைத்துச் சென்றமை தொடர்பில் சகல தரப்பினரிடமும் முறையிட்டோம்.

ஆனால் எந்தவிதபதிலும் இல்லை எனது மகனை கைது செய்த இராணுவ அதிகாரியை எனக்குத் தெரியும். அவரை நான் அடையாளம் காட்டுவேன். அவர் என்னுடன் நன்கு பழக்கப்பட்டவர் என்றார்.

இதேவேளை தனது மகன் வெள்ளவத்தையில் நின்றதை தனது உறவினர்கள் கண்டதாகவும் அவர் தனது சாட்சியில் மேலும் கூறினார்.

இதேவேளை நேற்றுச் சாட்சியமளித்த நல்லூரைச் சேர்ந்த த.புவனேஸ்வரி என்பவர், தனது மகன் பாதுகாப்பு அனுமதி பெறுவதற்கு யாழ்.சிவில் நிர்வாக காரியாலயத்துக்குச் சென்ற போது காணாமல் போனதாக தெரிவித்தார்.

2006 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17 ஆம் திகதி 12.30 மணிக்கு இச்சம்பவம் இடம் அபற்றது. எனது மகன் சிவில் அலுவலகத்துக்குள் சென்று அங்கு இருந்ததை ஏனையவர்கள் கண்டுள்ளனர்.

அவரது சைக்கிள் வெளியில் விடப்பட்டிருந்தது. ஆனால் அவர் பாதுகாப்பு அனுமதியை பெற்றுக் கொண்டு திரும்பி விட்டதாக எமக்கு தெரிவிக்கப்பட்டது. ஆனால் அவர் இன்றுவரை வீடுதிரும்பவில்லை தயவுசெய்து எனது மகனை திருப்பித்தாருங்கள் என வேண்டுகோள் விடுத்தார். (ச-5)

# கொழும்பில்...

இக்கடும் மழையினால் வெளியிடங்களுக்கான போக்குவரத்து பாதிப்படைந்துள்ளதாகவும் கூறப்பட்டது.

இதேவேளை நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று பெரும் அவலங்களுக்கு மத்தியில் மன்றிற்கு சென்றுவந்ததாக கூறப்பட்டது. (ச-5)

# நல்லூர்...

தேடிய போது நீரில் மூழ்கிய நிலையில் அவர் மீட்கப்பட்டு உடனடியாக யாழ். போதனா வைத்திய சாலைக்கு கொண்டுசெல்லப்பட்டார்.

அவர் அங்கு உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டது. நல்லூர் கந்தன் ஆலயத்தில் நடந்த இச்சம்பவம் பக்தர்கள் மத்தியில் பெரும் துயரை ஏற்படுத்தியுள்ளது. (ந)

# இராணுவத்தின் அறிவிப்...

யுத்தத்தினால் இடம் பெயர்ந்து கடந்த வருடம் மே மாதம் 17ஆம் திகதி நாங்கள் வட்டுவாகல் பிரதேசத்தைச் சென்றடைந்தோம். மறுநாள் 18ஆம் திகதி இராணுவ கட்டுப்பாட்டு பகுதியை சென்றடைந் தோம்.

அங்கு இராணுவத்தினரிடம் சரண டையும் விடுதலைப்புலிகளின் உறுப்பினர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்படும் என ஒலி பெருக்கியில் அறிவிக்கப்பட்டது.

இதனை நம்பி எனது கணவர் யோகரட்ணம் யோகி, கவிஞர் புதுவை இரத்தினதுரை, கல்விப்பிரிவைச் சேர்ந்த பேபி சுப்பிரமணியம், அரசியல் பிரிவைச்சேர்ந்த லோரன்ஸ் திலகர் உட்பட 50இற்கும் மேற்பட்ட விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் இராணுவத்திடம் சரணடைந்தனர்.

சரணடைந்த அனைவரும் ஒரு வாகனத்தில் ஏற்றப்பட்டனர்: அவர்கள் வாகனத்தில் ஏற்றப்பட்டு, அவ் வாகனம் புறப்படும் வரை நான் சம்பவ இடத்திலேயே நின்றிருந்தேன்.

இன்று ஒன்றரை வருடங்கள் கடந்துள்ளன. ஆனால் எனது கணவர் தொடர்பான எந்தவிதமான தகவல்களும் எவராலும் எனக்கு தெரிவிக்கப்படவில்லை.

சரணடைந்தவர்கள் தொடர்பில் அண்மையில் பெயர் விபரங்கள் வெளியிடப்பட்டன. புனர்வாழ்வளிக்கப்பட்ட புலி உறுப்பினர்கள் பலர் விடுதலை செய்யப்பட்டனர். ஆனால் எனது கணவர் தொடர்பில் எந்த தகவலும் இல்லை.

சரணடைந்தால் பொதுமன்னிப்பு என அறிவிக்கப்பட்ட நிலையில் சரணடைந்த எனது கணவர் எங்கே? தயவு செய்து அவர் தொடர்பான தகவல்களை பெற்றுத்தாருங்கள் என அவர் தனது சாட்சியத்தில் மேலும் தெரிவித்தார். (ச-5)

# பிரபாகரனின் மரணத்...

யினர் முன்னிலையில் பேசிக்கொண்டிருக்க முடியாது.

நான் இங்கு கொல்லப்பட்டிருப்பேன் என்னுடன் சேர்ந்து இங்கிருக்கும் நீங்களும் கொல்லப்பட்டிருக்கலாம். ஆனால் பிரபாகரன் இறந்துவிட்டார் என்கின்ற செய்தியை அறிந்த போது, அச்செய்தியை தொலைக் காட்சியில் பார்த்துக் கொண்டிருந்த போது என்னால் அன்று காலை உணவை உண்மையிலேயே சாப்பிட முடியவில்லை.

பிரபாகரன் அழிந்தமைக்கு இயக்கத்திற்குள் ஏற்பட்ட பிளவு ஒரு போதும் காரணமல்ல. கருணா அம்மானும் நானும் இயக்கத்திலிருந்திருந்தால் கூட பிரபாகரன் கொல்லப்பட்டிருப்பார்.

நடக்க இருக்கின்றவற்றை எவராலும் தடுக்கவேமுடியாது. புலிகள் இயக்கத்தால் இழைக்கப்பட்ட தவறுகளுக்கு நான் இயலுமான வரை பரிகாரம் தேடிக் கொண்டிருக்கிறேன்.

கடந்த கால தவறுகள் சரிசெய்யப்பட வேண்டும். அத்தவறுகளை நியா யப்படுத்தக் கூடாது. தனி நாடு என்பது பெரிய இலட்சியம்.

அந்த இலட்சியத்தை அடையக் கூடிய வலிமை எங்களுக்கு இருந் ததா? அவ் இலட்சியத்தை அடைய சர்வதேச அங்கீகாரம், இளைஞர்களுக்கான சரியான வழிகாட்டல் ஆகியன அவசியமாக இருந்தன. தமிழ்த் தலைவர்கள் தவறு இழைத்து விட்டனர். சிங்களத்தலைவர்களை மாத்திரம் குறை சொல்லி பயனில்லை.

சம்பந்தன் ஐயா சுயாட்சி, சுய நிர்ணய உரிமை கிடைக்கும் என்று . நம்புகின்றாரா? அவைகிடைக்காது. வடக்குக் கிழக்கு மாகாணங்களின் இணைப்பு மிகவும்தீமைபயக்க கூடியது. பிரிந்த வடக்கு கிழக்கே பயன் உடையது என்றார். (ந-5)

**MyWay English இல் பயிற்சி பெறுவோர்**

சனி, ஞாயிறு தினமும் ஒரு மணிநேரம் வகுப்பில் செலவுசெய்வதற்கு மேலதிகமாக ஒரு நிமிடமேனும் செலவுசெய்யாமல் மூன்று மாதங்களில் தமிழைப்போன்று சரளமாக ஆங்கிலத்தில் பேச முடியும்

சனி, ஞாயிறு 3 மாத பயிற்சி - 4 புதிய பிரிவுகள் ஆரம்பம் : 13.11.2010

பிரிவுகள் : காலை 8 - 9, காலை 10 - 11 மாலை 2 - 3, மாலை 4 - 5

அதிபர், ஆசிரியர், அரச அலுவலர்கள், பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி மாணவர்கள் 50% கட்டணத்துடன் 13.11.2010 வரை பயிற்சியில் சேரலாம்


ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் கூடுதலாக 8 ஆசிரியர்களும் ஒவ்வொரு அலுவலகத்திலிருந்தும் கூடுதலாக 6 அலுவலர்களும் 13.11.2010 வரை மட்டுமே சலுகைக்கட்டணத்துடன் பயிற்சியில் சேரலாம்

தனியார் அலுவலர்கள், இளைஞர், யுவதிகளுக்கு 50% சலுகைக்கட்டணம் இல்லை

**MyWay English** 182, Stanley Rd Jaffna **0773363456**

# மரண அறிவித்தல்

## சிவஸ்ரீ.பொ.இ.பொன்னம்பலக்குருக்கள்



மருதடி வயிரவர் கோயில் புலோலி பருத்தித்துறையை வதிவிடமாகக் கொண்ட சிவஸ்ரீ. பெ.இ.பொன்னம்பலக்குருக்கள் நேற்று வியாழக் கிழமை (11.11.2010) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நீலாம்பாளின் அருமைக் கணவரும் இரத்தினசபாபதி (லண்டன்), விஜயராணி (லண்டன்), மனோன்மணி (ரஞ்சி) (லண்டன்), பாலச்சந்திரன் (மருதடி) (திருகோணமலை), பவானி (ஜெயா)(லண்டன்), பிரபாகரன் (லண்டன்), சுபாஸ்கந்தன் (மரு தடி) ஆகியோரின் அருமைத் தந்தையும்

காலஞ்சென்ற பச்சைமால்மருகன்(லண்டன்), பரமேஸ்வரன் (லண்டன்), சாத்வீகன் (லண்டன்), சத்தியபாமா (லண்டன்) , மங்களேஸ்வரி (திருமலை) அஸ்யா(லண்டன்), கயல்விழி (மருதடி) ஆகியோரின் மாமனாரும்

சாயினி, சுவானி, பிரேமசாயி காலஞ்சென்ற ஜனார்த்தனன், விஜேந்திரன், ரூபா, கெங்காரூபன், தர்சன்,விதுஷா, அரன், சோபிகா, துஷ்யந்தன், சாயினி, தாசினி, சம்யுக்தா,நிரோஜன் ஆகியோரின் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று காலை 10 மணியளவில் மருதடியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பருத்தித்துறை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல் :
மகன்
பொ.சுபாஸ்கந்தன்

(2845)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.11.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.